# பாப்பரசர் விஜயத்தை யொட்டி கைதிகள் பலர் விடுதலையாவர்

## இலங்கை அரசு நடவடிக்கை

கோட்டை, புதன்

பாப்பரசர் போல் டிசம்பர் மாதம் 4-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வதை யொட்டி சிறைக்கைதிகள் பலரை விடுதலைசெய்ய இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

பாப்பரசர் போல் தமது நீண்ட உலகச் சுற்றுப் பயணத்தை நாளை ஆரம்பிக்கிறார். ரோமிலிருந்து தமது பயணத்தை ஆரம்பிக்கும் போல் அவர்கள் டிசம்பர் 4-ம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 2 மணி நேரம் தங்குவார்.

பாப்பரசரை வரவேற்பதற்கான விசேஷ ஏற்பாடுகளை இலங்கை அரசு துரிதமாக மேற்கொண்டுள்ளது

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ☆

**ஈழநாடு சந்தா**

(ஆள்மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| மூன்று மாதம் | ரூ. 18-00 | 4-00 |
| ஆறு மாதம் | ரூ. 34-00 | 7-50 |
| ஒரு வருடம் | ரூ. 66 00 | 14-00 |


# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 287
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 11 தமிழன் 26 வியாழக்கிழமை (26-11-70)


**ஈழநாடு சந்தா**

(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-50 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 8-00 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 15-00 |

# மிளகாய் பங்கீடு அதிகரிக்கப்படும்

கோட்டை, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனவு கடைகள் மூலம் மிளகாயைக்கூடிய விலைக்கு விற்பதை நிறுத்தும்படி உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது கூப்பனுக்கு வழங்கப்படும் மிளகாயின் அளவைக் கூட்டுவது பற்றியும் வர்த்தக அமைச்சர் ஆராயவுள்ளார்.

வெளிச்சந்தைகளில் மிளகாயின் விலை 8 ரூபாவிலிருந்து 12 ரூபாவாக அதிகரித்துள்ளது

கூட்டுறவு மொத்த விற்பனை கடைகளில் மிளகாயைப்பெற்றுப் பலர் கூடிய விலைக்கு விற்பதாகக் கிடைத்த புகாரைத் தொடர்ந்தே வர்த்தக அமைச்சர் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை மிளகாய் விநியோகத்தை நிறுத்தும்படி உத்தரவிடவுள்ளார்.

# ஆர்ப்பாட்ட ஊர்வலங்களால் அமைச்சரைப் பயமுறுத்தமுடியாது

—உதவிக்கல்வி அமைச்சர்

## யாழ். மாணவர் ஊர்வலம்பற்றி ஆட்சிமன்றத்தில் பிரஸ்தாபம்

கொழும்பு, வியாழன்

"ஆர்ப்பாட்டம் செய்து கல்வி அமைச்சரைப் பயமுறுத்திவிடமுடியாது" என்று உதவிக் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவ நேற்று ஆட்சிமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்தைக் குறிப்பிடுகையிலேயே உதவி அமைச்சர் இப்படிச் சொன்னார்.

கல்வியமைச்சின் மான்யம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்த உதவி அமைச்சர் திரு. துடாவ பேசினார். பிற்போக்குவாதிகளான சமஷ்டிக்கட்சியினரும், ஐக்கிய தேசியக்கட்சியினரும் மாணவர் ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னணியிலிருந்து செயல்பட்டார்கள் என்றும் அவர் சொன்னார்.

திரு. துடாவ மேலும் கூறியதாவது:-

மக்களின் கவனத்தை வேறு வழியில் திருப்பி ... ளது பிள்ளைகளுக்கு சிங்களம் கற்பிக்க வசதிகள் செய்து தருமாறும் என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

திரு துடாவை மேலும் கூறியதாவது: தோட்டப் பாடசாலைகளையும் கையேற்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். 858

கோவில் தகராறு:

# இடைக்கால தடை உத்தரவு ரத்து

யாழ்ப்பாணம், வியாழன்

கொக்குவில் கிழக்குகாரியபுலம் ஞானவைரவர் ஆலயம் சம்பந்தமாக ஆறுமுகம் கனகசபை சிவஞானம் என்பவர் தாக்கல் செய்த மனுவின் மீது யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி விடுத்த இடைக்கால உத்தரவுரத்து செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவை ஆட்சேபித்து ஐயம்பிள்ளை மகன் பாலாம்பிகைதாக்கல் செய்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டு இடைக்கால தடைஉத்தரவைரத்து செய்தார்.

மனுதாரும் செல்வி ஐயம்பிள்ளை பாலாம்பிகை, வன்னியசிங்கம் தம்பதிகள் ஆகியோர் தான் ஆலயத்துள் புகுவதையும் பூசை செய்வதையும் தடைசெய்யக்கூடாதென்று நீதிபதியை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை விட்டிருந்தார். மனுதார் ரூபா 500 பிணை கட்டியதன் பேரில் பாலாம்பிகை வன்னியசிங்கம் தம்பதிகள் ஆகியோர் சிவஞானத்தைத் தடைசெய்யக்கூடாதென்று நீதிபதிஒரு இடைக்காலத் தடையுத்தரவை உடனடியாக இம்மாதம்

## திருமலை மாவட்டத்தில் குடியேற்ற திட்டம்

கோட்டை, புதன்

திருகோணமலை மாவட்டத்தில் காணியற்ற விவசாயிகளுக்கு காணி வழங்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்படி முன்னோடியாக மதவாச்சிப் பகுதியில் முடிக்குரிய காணிகளை குறிப்பிட்ட பகுதி காரியாதிகாரி விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் காணிக் கச்சேரியை நடத்தவிருக்கிறார்.

## தமிழும் சிங்களமும் இரண்டாவது மொழி

மாணவர் குழப்பத்தில்

# வெளியார் தலையீடு உண்டா? பொலிஸார் ஆராய்கிறார்கள்

கொழும்பு, புதன்

சமீபத்தில் நடைபெற்ற மாணவர்குழப்பத்தில்வெளியார் தலையீடு உள்ளதாஎன்பதுபற்றி கண்டுபிடிக்கவிசாரணை நடைபெறுவதாக பொலிஸ்மா அதிபர் திரு. ஸ்ரான்லி சேனநாயகா தெரிவித்துள்ளார்.

வலதுசாரிசக்திகள் எவையேனும் மாணவர் குழப்பத்தைத் தூண்டிவிடலாமென அரசாங்க சார்பு ஆட்சி மன்ற அங்கத்தவர்கள் சந்தேகம் தெரிவித்திருப்பது குறித்து கருத்து தெரிவிக்கையில் பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் பொலிஸ்மா அதிபர் மேற் கண்ட தகவலை வெளியிட்

சக்தி குறைந்ததாகும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதலே பொலிசாரின் கடமையாகும். எனவே பொலிசார் இக்கடமையை நேர்மையாகச்செய்வர்.

அரசாங்கம் இம்மோதல் பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக்கமிஷனை நியமித்திருப்பதால் இவ்விஷயம்பற்றி அதிகம் நான் சொல்லவிரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

பல்கலைக் கழக தேஸ்டன் கல்லூரி மாணவர் மோதலில், தேஸ்டன் கல்லூரி மாணவர்களுக்குச் சார்பாக பொலிஸார் நடந்துகொண்டார்கள் என்று சுமத்தும் குற்றச்சாட்டில் எவ்வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சேபித்து ஐயம்பிள்ளை மகன் பாலாம்பிகைதாக்கல் செய்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டு இடைக்கால தடைஉத்தரவைரத்து செய்ததார்.

விபரம் வருமாறு:

திருநெல்வேலி வடக்கு கனகசபை சிவஞானம் என்பவர் சோமசுந்தரம்வன்னிய சிங்கத்திலும் வேறு ஆறு பேர்கள் மேலும் மேற்படி ஆலயத்தூண்களை இடித்துத் தன்னைச் சுடுவதாகப் பயமுறுத்தினூர்கள் என்று 1968-ம் ஆண்டு தொடர்ந்த கிரிமினல் வழக்கை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் இம்மாதம் 16-ந் திகதி தள்ளுபடி செய்ததைத் தொடர்ந்து மேற்படி சிவஞானம் என்பவர் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு மனுவைத்தாக்கல் செய்திருந்தார், அம்மனுவில் தானே அவ்வாலயத்தின் பரம்பரைகுருக்கள் தர்மகர்த்தா நிர்வாகி என்று நீதிமன்றம் பிரகடனம் செய்யவேண்டுமென் பிகை வன்னியசிங்கம் தம்பதிகள் ஆகியோர் சிவஞானத்தைத் தடைசெய்யக்கூடாதென்று நீதிபதிஒரு இடைக்காலத் தடையுத்தரவை உடனடியாக இம்மாதம் 19 ம் திகதி பிறப்பித்தார். ஐயம்பிள்ளை பாலாம்பிகை மாவட்ட நீதிமன்றத்தில் உடனடியாக எதிர்மனுதாக்கல் செய்தார் அம்மனுவை அட்வகேட் திரு எஸ். சூரசங்காரம் அட்வகேட் திரு. கே. ஆறுமுகத்தின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. ரீ. பூபாலனுடைய அனுசரணையுடனும் ஆஜராகி ஆதரித்து வாதித்ததன் பேரில் மாவட்ட நீதிபதி திரு ஏ. வைத்தியலிங்கம் மூன்று எதிரிகள் மீதும் ஏற்கனவே விடுத்த இடைக்கால தடையுத்தரவை ரத்துச் செய்ததுடன் அத்தடையுத்தரவு விடுக்கப்படவில்லையென்று கருதப்படவேண்டும் என்று உத்தரவிட்டு மேல் விசாரணையை டிசெம்பர் மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

# தமிழும் சிங்களமும் இரண்டாவது மொழி

இவ்விவாதத்தில் பேசிய திரு. பாலசூரியா எம். பி, சிங்களத்தையும், தமிழையும் இரண்டாவது மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்துப் பேசிய திரு துடாவ கூறியதாவது: சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் மொழியை இரண்டாவது பாடமாகவும், தமிழ் மாணவர்களுக்குச் சிங்களத்தை இரண்டாவது பாடமாகவும் படிப்பிக்க நாம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளோம். மூன்றாவது பாஷையாக ஜெர்மன் பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கவும் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

# 968 பட்டதாரிகள் நியமனம் யாழ்ப்பாணத்தில் 31 பேர்

அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரிகள் விபரம் பற்றியும் உதவிக் கல்வி அமைச்சர் கூறினர். யாழ்ப்பாணத்தில் தேவைக்கு அதிகமாகப் பட்டதாரிகள் இருப்பதால் அங்கு 31 பேரை மட்டும் நியமித்தோம். யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே 400 பட்டதாரிகள் சேவையில் இருக்கிறார்கள். தமிழ்மக்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ்மக்கள் மீது எமக்குள்ள நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காகவுமே இந்த 31 பேரையும் நியமித்தோம் என்று அமைச்சர் சொன்னர்.

மட்டக்களப்பில் 22பேரையும், அனுராதபுரப் பகுதிக்கு 196 பேரையும், பண்டாரவளையில் 146 பேரையும், நுவரேலியாவில் 133 பேரையும், சிலாபத்தில்111 பேரையும், அம்பாந்தோட்டையில் 143பேரையும், வவுனியாவில்15பேரையும், அம்பாறையில் 28 பேரையும், திருமலையில் 40 பேரையும், கல்முனையில் 14 பேரையும், பொலநறுவையில் 81பேரையும், மன்னரில் 8 பேரையும் பட்டதாரி ஆசிரியர்களாக நியமித்துள்ளோம் என்றும் உதவி அமைச்சர் தெரிவித்தார்.

---

அவர் சொன்னர்.

திரு. துடாவ மேலும் கூறியதாவது:-

மக்களின் கவனத்தை வேறு வழியில் திருப்பி களை ஏமாற்றுவதற்கு முயற்சித்தும், தேசத்துரோக கொள்கையையும் நாட்டை இரண்டாகப் பிளக்கவேண்டும் என்ற வகுப்புவாதக் கொள்கையு முடையவர்கள் சமஷ்டிக் கட்சியினர். வடபகுதி மக்களுக்கு சமஷ்டிக் கட்சியினரின் தலைமை தேவையில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர். இதை நான் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது நேரில் அறிந்துகொண்டேன். சமஷ்டிக் கொள்கையால் ஏற்படும் ஆபத்தை நான் அப்பகுதி மக்களுக்கு விளக்கிக் கூறியுமுள்ளேன்.

வடபகுதி மக்கள் சிங்களத்தைப்படிக்க விரும்புகின்றூர்கள். சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் தங்களது பிள்ளைகளுக்கு சிங்கள மொழியைக் கற்பித்துக்கொண்டு பொதுமக்களை சிங்களம் கற்கவேண்டாம் என்று கூறி வருகின்றனர். நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது பொதுமக்கள் பலர் தங்க

திரு துடாவை மேலும் கூறியதாவது: தோட்டப் பாடசாலைகளையும் கையேற்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். 858 பாடசாலைகளில் 75,000க்கு அதிகமான பிள்ளைகள் கல்வி கற்கின்றனர்.

கட்டுப்பெத்தை தொழில் நுட்ப மாணவர் வேலைநிறுத்தம்பற்றி அமைச்சரும், உயர் அதிகாரிகளும் பேச்சு வார்த்தை நடாத்த தயாராய்இருந்தனர். ஆனல் மாணவர்கள் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவில்லை. மாணவர்கள் வெளியார்தலையீடு காரணமாக கல்லூரிச் சொத்துக்களுக்குச் சேதம் விளைத்துவிட்டனர். இதற்கு முன்பும் பலதடவை மாணவர் வேலைநிறுத்தம் நடந்திருந்தாலும்கூட, கல்லூரி அதிபரைத் தாக்கியதில்லை. முதன் முதலாக கட்டுப்பெத்தைஅதிபர் தாக்கப்பட்டது கவலைக்குரியதாகும்,

## முஸ்லிம் மாணவர் பற்றி விளக்கம்

கட்டுப்பெத்தையில் 22 மாணவர்கள் அனுமதி பற்றி கல்வி அமைச்சர் பதியுதீன் மாமூத் வெளியிட்ட பத்திரிகைஅறிக்கையையும் உதவி அமைச்சர் சபையில் வாசித்தார். தேவைக்குஅதிகமான தகைமைகள் இந்த மாணவர்களிடம் இருப்பதாகவும், விஞ்ஞான ஆய்வுகூட வசதியற்ற கிராமப்புற மாணவர்களுக்கு வசதிசெய்து கொடுக்குமுகமாக பல கிராமப்புற மாணவர்களுக்கு அனுமதி கொடுத்தாகவும் அவர் சொன்னர்'

## டிப்ளோமோ மாணமர்

வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத கட்டுப்பெத்தை இறுதியாண்டு டிப்ளோமா மாணவர்களுக்கு விரைவில் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும். அவர் சொன்னர்.

ருப்பது குறித்து கருத்து தெரிவிக்கைகளில் பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் பொலிஸ்மா அதிபர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும்பொலிஸ் அதிபர் இம்மகாநாட்டில் தெரிவித்துள்ளதாவது: மாணவர்கள் விடயமாதலால் பொலிசார் கட்டுப்பாட்டுடனும் மிகக் கவனத்துடனும் நடந்து கொண்டார்கள். மாணவர் குழப்பத்தை முறியடிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட கண்ணீர் புகையும்

லில், தேஸ்டன் கல்லூரி மாணவர்களுக்குச் சார்பாக பொலிஸார் நடந்துகொண்டார்கள் என்று சுமத்தும் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையுமில்லை. ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் பொலிஸார் எவ்வித பாரபட்சமுமின்றி நடந்துகொண்டார்கள்.

பரிசுத்த பாப்பாண்டவர் விஜயத்துக்கான பொலிஸ் ஒழுங்குகளும் இம் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டன. 5 லட்சம் பேருக்கும் அதிக மாணவர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொள்வார்களெனப் பொலிசார் எதிர்பார்க்கின்றனர். (சி.பி.ஏ)

---

கட்டாய

## ஓய்வு பெறும் ஆசிரியர்கள் மகாநாடு

கோட்டை. புதன்

55வயதில் கட்டாய ஓய்வு பெறும் அகில இலங்கை ஆசிரியர் சங்க சம்மேளன பொதுக்கூட்டம் இம்மாதம் 27-ம் திகதி பி. ப, 2மணிக்கு கொழும்பு றேயல் மகாவித்தியாலய மண்டபத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

---

## தமிழ் நாட்டில் மழையால்

# ஒன்றரை லட்சம் பேர் வீடுகளை இழந்தனர்

சென்னை, நவ. 25

தமிழ் நாட்டில் சில தினங்களாகப் பெய்த கடும் மழை காரணமாக சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியிருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது

பள்ளமாக உள்ள பகுதிகளில் வெள்ளம்பாய்ந்து 80 ஆயிரம் குடிசைகளை அழித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளுக்கென தமிழ்நாடு அரசு ஏற்கனவே மூன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றது.

தஞ்சாவூர், சேலம் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பத்துப்பேர் வரை பலியாகியிருப்பார்கள் என்று அஞ்சப்படுகின்றது

---

# சமாதான நீதவான் வீட்டில் பெருந்தொகை அபின்

## உயர்தர பொலிஸ் கோஷ்டி கைப்பற்றியது

யாழ்ப்பாணம். புதன்

வல்வெட்டித்துறையில் சமாதான நீதவான் ஒருவரது வீட்டில் பெருந்தொகையான பெறுமதி வாய்ந்த அபினைப் பொலிஸார் கைப்பற்றினர்.

வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் சென்ற உயர்தர பொலிஸ் கோஷ்டி இன்று நடத்திய திடீர் வேட்டையில் இது கண்டு பிடிக்கப்பட்டது.

சமாதான நீதவான் இந்தியாவில் இருப்பதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது அவரது மகனும், இன்னெருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

# இலங்கைக்கு பல்கேரியா 20 லட்சம் ஸ்டர்லிங் உதவி

கோட்டை, புதன்

பல்கேரிய மக்கள் குடியரசு இலங்கைக்கு பொருளாதார தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதற்கான உடன்படிக்கை இன்று கொழும்பில் கைச்சாத்தானது.

இன்று காலை கொழும்பு வந்து சேர்ந்த பல்கேரிய மக்கள் குடியரசின் துணைப் பிரதமரும், வெளிநாட்டு வர்த்தக அமைச்சருமான திரு அக்வோவ் தலைமையிலான தூது கோஷ்டிக்கும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி பி இலங்கரத்தினவுக்குமிடையில் இன்று மாலை இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. பல்கேரியாத்துணைப் பிரதமர் தலைமையில் கொழும்பு வந்த 11 பேரையும் அமைச்சர் திரு ரி பி. இலங்கரத்தின வரவேற்றார்.

20 லட்சம் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான பொருளாதார, தொழில் நுட்ப உதவிகளை இலங்கைக்கு பல்கேரியா வழங்குமென இவ் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. விஞ்ஞான, தொழில் நுட்பத் துறையில் பல்வேறு உதவிகளை பல்கேரியா வழங்கும்.

புலமைப் பரிசில் கல்வி போன்றவற்றையும் பல்கேரியா இலங்கைக்கு வழங்குமென இவ் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கேரியாதி துணைப்பிரதமர் கோஷ்டி இன்று இரவு பிரதமரைச் சந்தித்து பேசவிருக்கிறது.

---

## யாழ். தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணை

# “2-ம் தடவை எண்ணிய போது மேலதிக வாக்குகளில் இரண்டு குறைந்தன”

## மனுதாருக்கு ஏஜெண்டாக இருந்தவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

“வாக்குகள் எண்ணப்பட்ட இரவு மூன்று மணியளவில் நான்காவது மனுதாரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் அவரது ஏஜண்டுகளும் தேர்தல் முடிவு அறிவிக்குமுன் வெளியேறிவிட்டனர். தேர்தல் முடிவு அதிகாலை 4-45 வரையில் தான் அறிவிக்கப்பட்டது. அதன்பின் மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்டன. 45 நிமிட நேரத்தில் நடந்தது.”

திரு. சி.எக்ஸ்.எஸ். மார்ட்டின் யாழ்ப்பாண எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து அவருடன் போட்டியிட்ட திரு. அல்பிரட் துரையப்பா இம் மனுவைத் தாக்கல்செய்திருந்தார். வாக்குகளைத் திருப்பி எண்ணுமாறும், முதல் மனுதார் திரு. மார்ட்டின் பெயர் பிரசுரிக்காமல் நோட்டீஸ் விநியோகித்ததாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் தேர்தல் ஆட்சேப மனு விசாரணை நேற்றுக்காலை யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் பண்டித குணவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது புரக்டர் வேலுப்பிள்ளை நடராசா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர். மனுதார் துரையப்பா சார்பில் வாக்குகள் எண்ணப்படும்போது ஏஜெண்டாக இருந்த புறக்டர் வேலுப்பிள்ளை நடராசாவே இப்படிக் கூறினர்.

மனுதாரர் துரையப்பாவும், 4-வது எதிர்மனுதார் திரு ஜி ஜி பொன்னம்பலமும் நீதிமன்றத்துக்குஇன்று வரவில்லை. 1-வது எதிர் மனுதார் திரு சி எக்ஸ் மார்ட்டின் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். 2-வது, 3-வது எதிர்மனுதார்கள் வந்திருந்தார்கள். மனுதார் சார்பில் அட்வக்கேட் சண்முகலிங்கம் ஆஜரானூர். 1-வது எதிர்மனுதர்ர் சார்பில் அட்வகேட் நவரத்தினராசா கியூ ஸி யும், 2-வது எதிர் மனுதார் சார்பில் மேவின் பெர்னண்டோவும், 4-வது எதிர்மனுதார் சார்பில் அட்வக்கேட் மோதிலால் நேருவும் ஆஜரானூர்கள்.

தொடர்ந்து வேலுப்பிள்ளை நடராசா சாட்சியமளிக்கையில், ‘அன்றிரவு 11 மணிக்கு தபால் வாக்களிப்புகள் எண்ணத் தொடங்கப்பட்டன. ஒரு மணி நேரம் அந்தச் சம்பவம் நடந்தது. அதன் பின் வாக்குப் பெட்டிகள் எண்ணப்பட்டன. 1-வது எதிர்மனுதார் சார்பில் 5 ஏஜெண்டுகளும், 4 வதுஎதிர் மனுதார் சார்பில்5ஏஜெண்டுகளும்இருந்தனர். மனுதார் சார்பில் மற்றும் வாக்குகள் எண்ணும் ஏஜெண்டுகளாக காதர், பஷீர், பேரின்பநாயகம், தெய்வேந்திரம் ஆகியோர் இருந்தனர். 2-வது தரம் வாக்குகள் எண்ணப்பட்டபோது முதலாவது எதிர்மனுதாரருக்கு தவருக அளிக்கப்பட்ட 2 வாக்குகள் என்னுல் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அங்குள்ள உத்தியோகத்தரிடம் சுட்டிக்காட்டினேன். அதனுல்அந்த இரு வாக்குகளும் நிராகரிக்கப்பட்டன. முதல் தடவை எண்ணும்போது 58மேலதிக வாக்குகள் இருந்தன. பின்னர் எண்ணப்பட்டபோது 56 மேலதிகவாக்குகளே இருந்தன’ என்றூர்.

வழக்கு விசாரணை இன்று ஆரம்பமானபோது நீதிமன்றத்தில் ஏராளமானேர்கூடியிருந்தார்கள்.

விசாரணை தொடர்ந்து நடக்கிறது.

நேற்று மாலை நடந்த விசாரணை விபரம் நாளைய பதிப்பில் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வைத்திய நிலையமொன்றிற்கு பெண் உதவியாளர் தேவை. எஸ். எஸ். சி. அல்லது ஜி. சி. ஈ. சித்தியடைந்துள்ளோர் இம்மாதம் 29-ந் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2525, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2525

தொன்மிகு நல்லையிற் தோன்றிய வண்மைமிகு "செஞ்சுடரை" உண்மையுடன் விற்று நன்மையாற்றும் விற்பனையாளர் தேவை. முன் பணத்துடன் தொடர்பு விரும்புகிறோம். சு. ஆறுமுகம், 159/5, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2530

எலெக்ரோ பிளேற்றிங் வேலை செய்வதில் மிகவும் தேர்ச்சியுள்ளவர்கள் தேவை. 1-12-70க்கு முன் நேரில் வரவும். ஸ்டார் எலெக்றிக் வெல்டேர்ஸ் அன் ரேணிங்வேக்ஸ், யாழ்ப்பாணம். 2533

## ஊர்காவற்றுறைப் பட்டினசபை மறு ஏல விற்பனை விளம்பரம் 1971

ஊர்காவற்றுறைப் பட்டினசபைக்குரிய மரக்கறிச் சந்தை-வண்டில், கார்கள் நிற்பாட்டும் காலையும், 4-ம், 5-ம் இலக்கமுடைய இரு கடைகளும் 1970-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ந் திகதி (10-12-70) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு பட்டின சபைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். முழு விபரங்களையும் பட்டினசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்

சி. இம்மானுவல்,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

23-11-1970. 2567

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 26—11—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 விவசாயப்பிரச்னை, 7-00 வீட்டு வைத்தியம், 7-15 கிளாரினெட், 7-45 நேயர்கடிதங்கள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 புல்லாங்குழல், 9-45 கதாப்பிரசங்கம், 10-30 செய்தித்தொகுப்பு, 10-35 முஸ்லிம்நிகழ்ச்சி.

## யாழ். நூதனசாலை ஊழியர் கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நூதனசாலை ஊழியர்கள் யாழ். கிளை அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்கமூலம் மகஜர் ஒன்றை கலாச்சார அமைச்சருக்கு அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் காணப்படும் கோரிக்கைகளாவன:

1956-ம் ஆண்டிலிருந்து யாழ். நூதனசாலை கனிஷ்ட ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை.

அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடமை ஒழுங்கு அட்டவணைகள் முற்கூட்டியே ஒழுங்கு செய்து அவ்வூழியர்களுக்கு கடமைவசதி செய்யக்கூடிய முறையில் வழங்குமாறு சங்கம் கோருகிறது.

வாரம் தோறும் போயாவிற்குப் பதிலாகவோ அல்லது அரசாங்க விடுமுறைக்குப்பதிலாகவோ லீவு வழங்கப்பட ஏற்றநடவடிக்கை எடுப்பதோடு, அவ்வாறு லீவு நாட்களுக்கு அவர்கள் வேலைசெய்ய நேரிட்டால் மேலதிக சம்பளம் கொடுக்கவோ அன்றி கடமை லீவு வழங்கவோ ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நூத[..] சாலை ஊழியர்கள் குறைகளையும், முறைப்பாடுகளையும், இலாகா மேலதிகாரி நிர்வாக விசாரணைக்கு எடுக்கவேண்டும்.

காவலர்போன்ற ஊழியர்களுக்கு கடமைசெய்வதற்கு ஏற்ற உபகரணங்கள் வழங்கப்படவேண்டும்.

ஓர் ஊழியரை இடமாற்றம் செய்யப்படும்போது தொழிற்சங்கப் பிரதிநிதியுடன் கலந்து காரணம் காட்டி ஆலோசித்தபின்பே இடமாற்றம் வழங்கப்படவேண்டும்.

சம்பள முற்பணம் போன்ற உதவிகள் உரிய காலத்தில் வழங்க ஆவன செய்யப்படவேண்டும்.

ஊழியர்கள் தங்களது உணவை உண்பதற்கும் ஓய்வு எடுப்பதற்கும், தமது துவிச்சக்கர வண்டிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் ஏற்ற ஓர் அறையை ஒதுக்கிக் கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

ஊழியர்களின் வேலை நேரம் 8 மணித்தியாலமாக்கப்படவேண்டும்

யாழ். நூதனசாலையில் ஊழியர்கள் எண்ணிக்கை கடந்த பத்துஆண்டுகளுக்கு முன்பு உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பரிசிலனை செய்யும்போது தற்போது ஊழியர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது எனவே ஊழியர்களின் பற்றுக்குறையை நீக்கும் பொருட்டு ஊழியர்களின் எண்ணிக்கையைக் கூட்ட ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நூதனசாலைப் பொறுப்பாளர் மற்றும் ஊழியர்களையும் அரசாங்க உத்தியோகத்தர்கள் என மதித்து பரஸ்பர நல்லுறவுடன் இருப்பதையே சங்கம் விரும்புகின்றது. ஊழியர்களை பொதுமக்கள் முன்வைத்து அவமதித்துப் பேசுவதைச் சங்கம் விரும்பவில்லை.

அதிபர் லீவு நாட்களில் நூதனசாலை பூட்டுவதை பொதுமக்கள் விரும்புகிறார்களில்லை. பொறுப்பாளர் லீவில் போகும் போதும் நூதனசாலை திறக்கப்பட ஏற்ற ஒழுங்குகள் செய்யுமாறும் சங்கம் கோருகின்றது (கு.வி.ம.)

## இன்றைய பலன்

மேஷம்-ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ளநேரிடும். நிதானம் வேண்டும்.

ரிஷபம்- மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

மிதுனம்- அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபட விரும்புவீர்கள். தெய்வத்தின் துணையுமுண்டு.

கடகம்- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல்கலை தாக்கும் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

சிம்மம்- வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று.

கன்னி- துன்பத்தின் சாயல் மனதிலே படியும். புனைந்துரைகளால் மனது புண்படும். மகிழ்ச்சியான தினம்.

துலாம்- பேச்சுவன்மை

## யாழ். இந்து மாணவருக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஐக்கிய நாடுகள் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தையொட்டி யாழ்ப்பாண மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் த. சிவதட்சணாமூர்த்தி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

பலகல்லூரிகள் மாணவர் பங்குபற்றிய பேச்சுப்போட்டியில் சிரேஷ்ட பிரிவில் இவருக்கு முதலிடம்கிடைத்தது. கனிஷ்ட பிரிவில் ந. விக்கினேஸ்வரன் முதலிடத்தைப்பெற்றார். இவரும் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

...  ...

## நாவலர் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் சார்பில் மாலை 6 மணிமுதல் ஆறுமுக நாவலர் விழா நடைபெற்றது. விசேடபூசை பஜனை என்பன நடைபெற்றன. விழாவிற்கு சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி தலைமை வகித்தார்.

திரு. கந்தசாமி தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது: நாவலர் பெருமானுக்கு நினைவு விழா எடுக்கவேண்டியது எமது தலையாய பணியாகும். சைவ மன்றங்கள் பெருவிழா எடுப்பதோடு நின்றுவிடாது நாவலர் பெருமான் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து அப்பணிகளை செய்ய முன்வரவேண்டும் என்று கூறினார். அடுத்தபடியாக திரு. சா. பஞ்சாட்சர ஐயர் "நாவலர் பணிகள்" என்னும் பொருள் பற்றி பேசினார். நாவலரால்வெளியிடப்பட்ட நூல்களில் அச்சுப்பிழைகளைக் காணமுடியாது. பிழை இன்றி நூல்களைவெளியிட்டார். சைவ விஞவிடை போன்ற அரும் பெரும் சமய நூல்களை அச்சிற்தந்தவர் நாவலர் எனக் குறிப்பிட்டார் செல்வன் இரவீந்திரன் "நாவலர்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

## மோட்டார் ஹோட்டல்

லண்டன், நவ. 25

கார் ஓட்டுபவர்களுக்கென விசேஷமாக லண்டனில் ஒரு ஹோட்டல் திறக்கப்பட்டிருக்கிறது. 'மோட்டார் ஹோட்டல்' எனப்படும் இந்த தங்குவிடுதியில் கார்கள் தரித்து நிற்பதற்கான சகல வசதிகளும் உள்ளன.

காரைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க இடவசதியல்லாத காரணத்தினுல் வாகனக்காரர்கள் பெரிய நகரங்களில் தங்கிச் செல்வது கஷ்டமான காரியமாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்சனையைக் கொண்டே வாகனக்காரர்களுக்கு பிரத்தியோகமான முறையில் இந்த ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

## விபத்து

இமையாணன், செவ்.

உடுப்பிட்டியில் நடந்த சைக்கிள் - கார் விபத்தொன்றில் சிக்கிய மாணவன் ஒருவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி சந்தைக்கு முன்பாக பிரதான வீதியில் இமையாணனைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவனின் சைக்கிளும், எதிர வந்த ஒரு காரும் மோதியதால் இவ்விபத்து நடைபெற்றது.

சைக்கிளில் சென்று விபத்துக்குள்ளான அம்மாணவன் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
இன்று மட்டும்
என்.ரி.ராமராவ்-ஜெயலலிதா நடித்த
**அபூர்வப்பிறவிகள்**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா—அசோகன் நடித்த
**மாட்டுக்கார வேலன்**


## 'ஏழை, பணக்கார வேற்றுமை வித்தியா பகுதிக்கு இல்லை'

உரும்பிராய், புதன்

"ஏழைப்பிள்ளைகள் பணக்காரப்பிள்ளைகள் என்ற வித்தியாசம் காட்டுதல் வித்தியாதிபகுதிக்கு இல்லை."

சண்டிலிப்பாய் வடக்குத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பெற்ருர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில், சிறப்புரை வழங்கிய, உடுவில் வட்டார வித்தியாதிகாரி திரு. த. இராசா ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

[எந்தப் பிள்ளைக]ளுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை, ஒரே பாடத்திட்டம்தான் எல்லாப்பாடசாலைகளிலும் நடைமுறையிலுள்ளன. பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்கும் விஷயத்தில், ஒரு பாடசாலைச் சூழலிலுள்ள பிள்ளைக்குத்தான் முதலில் தருணம் கொடுக்கப்படுகிறது" என்றும் தெரிவித்தார்.

இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த தலைமையாசிரியர் திரு. மா. தம்பிராசா பாடசாலை முன்னேற்

## கணக்கியலில் 'வரவு—செலவு' என்ற பதமே சரியாம்

கோட்டை, புதன்

'கணக்கியலில்' டெபிற்பக்கம்', 'கிறடிற்பக்கம்' என்ற இரு பதங்களுக்கும் 'வரவு-செலவு' என்பதே சரியான கலைச்சொற்கள் என அரசகரும மொழித் திணைக்களக் கமிட்டி 57ம் ஆண்டிலேயே தீர்மானித்துள்ளது. சிலரின் ஐயங்களைத்தீர்ப்பதற்குமீண்டும் அண்மையில் அக் கமிட்டி கூடி அச்சொற்களையே சரியான சொற்கள் என உறுதிப்படுத்தியது.

சகல வித்தியாலயங்கள், மகா வித்தியாலயங்கள், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை யாவற்றிலும் இவ்விரு பதங்களுமே பல வருடங்களாக உபயோகத்திலுள்ளன. பரீட்சைப் பகுதியும் மேற்படி திணைக்களத்தின் கலைச் சொற்களையே சகல பாடங்களுக்கும் பின்பற்றி வருகின்றது.

விஷயம் இவ்வாறிருக்க எமது யாழ். கனிஷ்டதொழிநுட்பப் பாடசாலை மட்டும் கணக்கியலில் கலைச்சொற்களைப் புறக்கணித்து தவறிழைத்துவிட்டு இப்பொழுது பரீட்சைப் பகுதியில் பிழையைச் சுமத்த முயல்வதன் காரணம் தெரியவில்லை. இனிமேலாவது யாழ். கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரி உட்பட எல்லாப்பாடசாலைகளும் சகல பாடங்களுக்கும் அரசகரும மொழித் திணைக்களத்தின்கலைச்சொற்களையே உபயோகிப்பது பொருத்தமானதுடன் ஒருமைப் பாடாகவும் இருக்கும்'.

யாழ் கனிஷ்ட தொழில் நுட்ப கல்லூரிபழையமாணவர் சங்கம் சங்கத்தலைவர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் தலைமையில் கொழும்பில் கூடியபோது தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கணக்கியல் பற்றுவரவா அல்லது வரவு செலவா சரியென்பதை ஆராய்ந்து ஏகோபித்த முடிவெடுக்க விரைவில் சார்ட்டட் அக்கவுண்டன்ட்களைக் கொண்ட கமிஷன் ஒன்று அமைக்கப்படவிருப்பதாகவும், இலங்கையில் பெருவாரியான வர்த்தகநிலையங்களிலும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் பற்று வரவு முறையே நடைமுறையிலிருப்பதாகவும் சில தினங்களின்முன் 'ஈழநாடு' இதழில் செய்தி வெளியாகியிருந்ததைத் தொடர்ந்து யாழ். தொழில் நுட்பக் கல்லூரி பழைய மாணவர்கள்கூடி இதுபற்றி ஆராய்ந்தனர்.

'வரவு-செலவு' என்ற பதமே சரியானது என சங்கம் இக் கூட்டத்தில் தீர்மானித்ததுடன் கணக்கியல் சம்பந்தமாக ஆராய கமிஷன் நியமிக்கப்படுவதற்கும் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது.

## நாவலர் விழாவில் பரிசு பெற்றோர்

எழுதுமட்டுவாள், புதன்

வடலியடைப்பு பண்டத்தரிப்பு கலைவாணி சனசமூக நிலையத்தினர் நடாத்திய நாவலர் விழாவிற்கு ஆசிரியர் சி. மயில்வாகனம் தலைமைவகித்தார் விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுப்போட்டியில் பரிசுபெற்றவர்களின் விபரம் வருமாறு:

செல்விகள் ச. சரோஜினிதேவி, சி. ஜெயராணி, ம. அரியமலர், ச. பூமணி

வெற்றியீட்டியவர்களுக்கு

## பரீட்சை பின்போடப்பட்டது

கோட்டை, புதன்

டிசம்பர் 4-ம் திகதி பரிசுத்த பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம்செய்வதையிட்டு அன்றையதினம் நடைபெறவிருந்த பொது எழுதுவினைஞர் வகுப்பின் 11-ம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாதம் 10-ம் திகதிக்குப் பின்போடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3-ம் 4-ம் வகுப்பு பரீட்சைகள்

உடுப்பராய், வியா.

வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினுல் நடாத்தப்படும் மூன்றும் நான்காம் வகுப்புப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றன.

ஆயிரத்து அறுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பதினைந்து பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்றனர். கொழும்புப் பகுதி பாடசாலைகள் உட்பட இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் ப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுக்கார வேலன்


வின்ஸர் - யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர் ★ வாணிஸ்ரீ

மனோகர், ஆனந்தன், நாகேஷ்

விஜயலலிதா, சுந்தரராஜன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

தேவரின்

நேர்வழி

5வது வெற்றி வாரம்!

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 10-00

போயா நாட்கள் 10-30 மெற்னி




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி

அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி

மற்றும் பலர் நடித்த

உயர்ந்த மனிதன்

இன்று முதல்

கெப்பிட்டல் பிளாஸா மைலன்

திரைகளில்

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

முத்துராமன் — வாணிஸ்ரீ

மற்றும் பலர் நடித்த

கண்ணன் என் காதலன்


புனைந்துரைகளால் மனது புண்படும். மகிழ்ச்சியான தினம்.

துலாம்- பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள், கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு.

விருட்சிகம்- பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும் தொழில்துறையிலும் பின்தங்க நேரிடும், மனத்திடம் விரும்பத்தக்கது.

தனுசு- மாதுருவழிப்பெருமைக்கு இடமுண்டு. மனம்போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்புண்டு.

மகரம்- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும்.

கும்பம்- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப் பேணவும். பகைமூட்டம் சேடும். பதட்டமும் உடன்சேரும்.

மீனம்- குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடிவடையும், சிறப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

சிவாஜி—பத்மினி

நடித்த

தில்லானா மோகனாம்பாள்

ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 2-30-6-30, 10-00

எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா

நடித்த

காவல்காரன்

மனோகரா

(யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00

ஹந்தபான

(சிறந்த சிங்களப்படம்)

REGAL

Jaffna

Daily

10-30, 4-45, 7 00 & 9-45

Keir Dullea

in

2001: A SPACE ODYSSEY


காரி திரு. ச. இராசா ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், மகாவித்தியாலயப்படிப்புக்கும், கனிஷ்ட பாடசாலைப்படிப்புக்

இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த தலைமையாசிரியர் திரு. மா. தம்பிராசா பாடசாலை முன்னேற்றம் பற்றிப் பேசினார். அடுத்த ஆண்டு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

## 'இலக்கிய சஞ்சிகைகளுக்கு அரசு சலுகை தரவேண்டும்

வெள்ளவத்தை, புதன்

"இந்த நாட்டின் இலக்கியச் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வளர்க்க வேண்டும் என்ற பேரார்வம் மேலெழுந்துள்ள இக்காலத்தில் சஞ்சிகைகளைச் சந்தாதாரர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான தபாற் செலவு ஐந்து சதத்திலிருந்து பத்துச்சதமாக உயர்த்தப்பட்டுள்ளது அச்சடிக்கும் காகிதத்தின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தாதாரர்களின் பலம் இல்லாமல் எந்த ஓர் இலக்கியச் சஞ்சிகையையும் நடாத்த முடியாது. எங்கள் சஞ்சிகைகளுக்கு ஒரு விளம்பரமேனும் தந்துதவாத அரசாங்கம் அனுப்பும் கூலியை மட்டும் உயர்த்தியிருக்கிறது. இலக்கியச் சஞ்சிகைகளுக்குச் சலுகைதரப்படவேண்டும்" இவ்வாறு சாகித்திய மண்டல உறுப்பினரான திரு. டொமினிக்ஜீவா கொழும்பு புறக்கோட்டை மலிபன் வீதியில் நடைபெற்ற இலக்கிய நண்பர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

நெல்லை க. பேரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. டொமினிக்ஜீவா தொடர்ந்து கூறியதாவது;- வளர்ந்து வரும் எழுத்தாளர்களைக் கண்டு பழைய எழுத்தாளர்கள் பொறாமைப்படக்கூடாது. வளர்ந்த எழுத்தாளர்கள் மற்றவர்களையும் வளர்த்து இந்த நாட்டில் நல்ல இலக்கியகாரர்களை உருவாக்கவேண்டும்."

திரு. இர. சந்திரசேகரன், திரு. ஆ. குருசாமி ஆகியோரும் பேசினர். பல எழுத்தாளர்களின் சிறுகதைகள் இக் கூட்டத்தில் விமர்ச்சிக்கப்பட்டன.

......

### பனிப்புலம் அம்பாள் வெற்றி

சுழிபுரம், புதன்

பனிப்புலம் அம்பாள் சன சமூக நிலையக் கோஷ்டிக்கும் மூளாய் இந்துவாலிபர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பனிப்புலம் அம்பாள் சன சமூக நிலையக் கோஷ்டியினர் 3—1 கோல்களால் வெற்றி பெற்றனர் திரு. கே. நடராசா போட்டிக்கு மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

......

### குமாரசூரியர் மறுப்பு

கோட்டை, புதன்

இந்திய சஞ்சிகைகள் இங்கு இறக்குமதிசெய்வதுகுறித்து நாம் இதுவரை எதுவிதமுடிவுக்கும் வரவில்லை என்பதை மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் இவ்வாறு அமைச்சர் குமாரசூரியர் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் 'சன்' பத்திகையில் தென் இந்திய சஞ்சிகைகள் இறக்குமதிச் செய்தியொன்று வெளிவந்தது. எதிர் வரும் ஜனவரி முதல் இந்திய சஞ்சிகைகளின் வர்த்தக இறக்குமதி தடைசெய்யப்பட வேண்டுமென்று அமைச்சரின் தலைமையிலுள்ள கமிட்டி சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தபால்தந்தி அமைச்சர் திரு குமாரசூரியர் இவ்விடயம் சம்பந்தமாக தெரிவித்ததாவது: கடந்த வாரத்தில் நானோ அல்லது எனதுகுழுவினரோ இந்திய சஞ்சிகைகள் இறக்குமதி சம்பந்தமாக எந்தவிதமான கருத்துக்களும் வெளியிடவில்லை.

### கூட்டுறவு புனரமைப்பு

அம்பன், புதன்

கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்புத் திட்டம் பற்றியும் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்பம் பெறும் சங்கங்கள் அமைப்பதுபற்றியும் பொதுமக்களுக்குவிளங்கவைக்கும்முறையிலும் பிரசாரக் கூட்டங்களை அவ்வப்பகுதி கூட்டுறவுப் பரிசோதகர்களும், வட்டாரப் பரிசோதகர்களும் நடத்திவருகின்றனர்.

செல்விகள் ச. சரோஜினிதேவி, சி. ஜெயராணி, ம. அரியமலர், ச. பூமணி

வெற்றியீட்டியவர்களுக்கு திரு சூ. நாகலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

பாகங்களில் இருந்தும் ப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## இலங்கையில் பிரபல பிரிட்டிஷ் 'பலே' நடன ஜோடி

சர்வதேசப் புகழ் பெற்ற பலே நடனஜோடியான ஜெல்கோ யுரேஷாவும் பெலின்டா ரைட்டும் இப்பொழுது இலங்கைக்கு வந்துள்ளார்கள். கணவன் மனைவியான இந்த ஜோடி இம்மாதம் கொழும்பு நவரங்கஹலவில் நடனநிகழ்ச்சிகளை அளிக்கவிருக்கின்றனர் இந்நிகழ்ச்சிகளின் போது இவர்கள் நான்குவித பலே நடனங்களை அரங்கேற்றுவார்கள்.

பலே நடனமானது இன்று சர்வதேசக் கலையாகத் திகழ்கிறது. பழமைவாய்ந்த இக்கலை இப்படிப்பட்ட நடன நட்சத்திரங்களில் உயர்ச்செறிவு பெற்றுள்ளதென்றே கூறவேண்டும். இன்று பிரிட்டனில் தனித்து நின்று பலே நடனம் ஆடுபவர்களில் பெலின்டம ரைட்டும் ஜெல்கோ யுரேஷாவும் முதன்மையானவர்கள். மற்ற ஜோடிகளை விட இவர்களிடம் காணப்படும் ஒத்திசைவே இவர்களது சர்வதேச வெற்றிக்குக் காரணமெனலாம். சகல விதத்திலும் அவர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் ஏற்றவர்கள்.

எந்த ஒரு கலைக்குழுவிலும் சேராது தனித்து நின்று உலகைச் சுற்றிச் செல்லுமிடமெல்லாம் தமது நடனத்தை அரங்கேற்றிப் பெரும் வெற்றி கொண்டுள்ள கலைஞர்கள் இவர்கள் 1967-ம் ஆண்டு இந்த நடன ஜோடி இலங்கைக்கு விஜயம்செய்தது குறிப்பிடத்தக்கது. இத்தடவை இவர்களது விஜயத்தை பிரிட்டிஷ் கவுன்சில் ஒழுங்கு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கலைப்பொருள் வாழ்வுக்குப் பயன்பட வேண்டும்'

— கி. வா. ஜ.

யாழ்ப்பாணம், வியா

'திட்பமாக இருப்பவற்றை எம்மால் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் நுட்பத்தை அறிஞர்களால் மட்டுமே உணர முடியும். பல மதங்களில் தொழிலும் ஒரு கலையாகவே பேணப்படுகின்றது.'

இவ்வாறு தமிழகத்திலிருந்து வந்துள்ள கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் மன்றத்தின் இலக்கியக் கூட்டத்தில் கலை நுட்பம் என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார். மன்றத் தலைவர் திரு. ச. க. மதியாபரணம் தலைமையில் நடைபெற்றது.

திரு. கி. வா. ஜ. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'நாம் சிறந்த நாகரீகம் அடையக் கலையில் வளர்ந்திருக்க வேண்டும். ஒரு தொழிலில் இன்பம் கண்டால் அது கலையாகவே மாறிவிடும். கலைப்பொருள் எதற்காக அமைக்கப்பட்டதோ அது கருத்துக்கும் வாழ்க்கைக்கும் பயன்பட வேண்டும். எமக்குத் தொழில்நுட்பம் மட்டும் போதாது கலைநுட்பமும் அவசியம்.

பழகு தமிழில்தான் உண்மையான மொழிநுட்பத்தைக் காண முடியும். குடும்பச் சண்டைகளின்போதுதான் பழகுதமிழ் சரளமாக வெளிவருவதைக் காணலாம். ஒருவரை இகழும்போதும் அதில் நுட்பமிருக்க வேண்டும். இப்பொழுது சமைந்த பெண்களையே பார்க்கின்றோம். முன்னர் சமைக்கும் பெண்களைக் கண்டோம்.

நாம் எதைச் சொல்லுகின்றோம் என்பதல்ல கலை. எப்படிச் சொல்லுகின்றோமென்பதே கலை. பாட்டிலே இராகம், நடனத்தில் தாளம், மொழிக்கு இலக்கணம், கோணலிலே ஒரு மாணல் அவசியம் அதுபோல் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு வரையறைவு இருக்க வேண்டும்.

ஒரு கவிஞன்தான்சொல்ல நினைக்கும் பொருளை உவமானத்தாலேயே விளக்குவான். உவமானம் திட்பமாக இருக்கும் வடிவத்தை மாற்றி உருவமாக்கி இன்பம் பயக்கும். 'அனிச்சம் பூவும், அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சி முள்போல் குத்துமென்று வள்ளுவர் கூறுவதில் காணப்படும் பொருள் நுட்பம் அருமையானது. கணவன் செய்யும் தவறுகளை மறப்பவளே உத்தம மனைவியாவாள் அம்மனைவியின் கடமையுமதுவே. உடலொட்டியதுதான் காதல் அல்ல. உயிரொட்டியதுதான் காதல் எல்லாப்பிறவிகளிலும் கணவன்-மனைவியாக வாழுவதே தூய காதல்.

ஒன்றை உணராது இன்பம் பெற முடியாது கலையை ரசிக்கும்போதே அதன் நுட்பத்தை உணர முடியும். இதனையே 'தரம் பார்த்தல்' என்பர். கலைஞர்களும் கலைநுட்பமும் வளரவேண்டியது அவசியம்.

செயலாளர் திரு. ஜெயரத்தினம் நன்றியுரை கூறினார். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. சி. டா. ஜெயசிங்கம் கி. வா. ஜ. வுக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றார். (உடு. நி)

# தமிழ்படத்தயாரிப்பாளர்களை ஒன்று திரட்ட முயற்சி

யாழ்ப்பாணம் வியா

இலங்கைத் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களை ஒன்று திரட்டி தமிழ்ப்பட விருத்தியை ஊக்குவிக்கும் வழிகளை ஆராய்வதற்காக சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. நா. துரைராசா முயற்ச்சி எடுப்பதாகத் தெரிகின்றது.

இதுசம்பந்தமாக ஒரு மகாநாட்டை அடுத்தவார முற்பகுதியில் அவர் கூட்ட இருப்பதாகத் தெரிகின்றது இக்கூட்டத்திற்கு 'குத்துவிளக்கு'த்தயாரிப்பாளர் எஸ். துரைராசா மற்றும் தயாரிப்பாளர்கள் அழைக்கப்படுவார்கள். அடுத்த மாதம் சென்னையில் நடைபெறும் இலங்கைத்திரைப்பட விழாவிற்கான ஒழுங்குகளைச் செய்யஇலங்கை வந்துள்ள உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா ஜனார்த்தனம் இக் கூட்டத்திற்கு அழைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கினி நாட்டுக்கு ஐ. நா. குழு புறப்பட்டுச் சென்றது

நியூயோர்க். நவ 25

மேற்கு ஆபிரிக்க குடியரசான கினிநாட்டின்மீது அந்நிய கூலிப்படைகள் நடத்தியுள்ள தாக்குதல்களினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐ நா தூதுக்குழு நியூயோர்க்கிலிருந்து கொனக்கிரிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது

கொலம்பியா, போலந்து சாம்பியா, பின்லாந்து நேப்பால் ஆகிய 5 நாடுகளின் ஐக்கியநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட இந்த தூதுக்குழுவுக்கு நேப்பால் பிரதிநிதி தலைமை வகிக்கின்றார்.

கினிநாட்டின்மீது அந்நிய கூலிப்படைகள் கடந்தஞாயிறன்றும் திங்கட்கிழமையன்றும் தாக்குதல்களை நடத்தினார்கள்.

கினிநாட்டின் தலைநகரை கைப்பற்றுவதற்காகவே இந்த முயற்சி நடைபெற்றுள்ளது என்றும் உள்நாட்டில் எதுவித குழப்பமும் இல்லை யென்றும் அந்தநாட்டின் அதிபர் டூரே அறிவித்திருக்கிறார். போர்த்துக்கலின் தூண்டுதலின்பேரிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றதாவும் போர்த்துக்கல் போர்ப்படகுகள் தமது கடல்பிரதேசத்தில் சுற்றித் திரிவதாகவும் இவர் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால் போர்துக்கல் இந்தக் குற்றச்சாட்டுக்களைத்தொடர்ந்து மறுத்துவருகின்றது.

தென் துருவ யானைத்தீவுக்கு

# பிரிட்டிஷ் ஆய்வு குழு பயணம்

லண்டன், நவ 25

தென்துருவ பனிப்படலத்திலுள்ள யானைத்தீவு எனப்படும் மர்மம் நிறைந்த பிரதேசத்தை நோக்கி பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கோஷ்டி ஒன்று பயணமாகியுள்ளது. 14 பேர்களைக் கொண்ட இக்கோஷ்டி இவ்வாரம் விமானமூலம் பியூனஸ்எயஸ் நகரை சென்றடைந்தது இங்கிருந்து'என்ருரன்ற்ஸ்'எனப்படும் கப்பல்மூலம் இக்கோஷ்டியினர் தென்துருவம் நோக்கிப் புறப்படுவார்கள்

இந்த ஆராய்ச்சிக்குழுவில் ஒரு புவியியல் நிபுணர், ஒரு தாவரவியலாளர். ஒரு விலங்கியல் நிபுணர், ஒரு நில வளவையாளர், ஒரு வைத்தியர் ஆகியோரும் அடங்குவர். ஆபத்துகள் நிறைந்தஇப்புதிரான பனித்தீவில் இதுவரை மனிதன் காலடி எடுத்து வைக்கவில்லை. இத்தீவு பனிமலைப் பாறைகள் நிறைந்த பிரதேசமாகையால் இவர்கள் பெரிய இயந்திர சாதனங்களையோ வாகனங்களையோ கொண்டுசெல்லவில்லை. இத்தீவினுள் கால் நடையாகச் சென்று கூடாரமடித்து ஐந்து மாதங்கள் வரை இங்கு வசிப்பதற்கு இவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

# நாவல் ஆசிரியருக்கு விருது

பேர்லின், நவ.25

''மக்கள் நட்பின் மாபெரும் தாரகை'' என்றபொன் விருது அன்னஸீகர்ஸ்என்ற முது பெரும் பெண் ஆசிரியருக்கு வழங்கப்பட்டது.

ஜெர்மன் சோஷலிஸ இலக்கியத்துக்கு ஆற்றிய பணியை கௌரவிக்கும் முகமாகவே இதுவழங்கப்பட்டது.

அன்னஸீர்கஸுக்கு 70வயதாகிறது'

மாணவர்நலனில்

# பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் பங்கு

நாவலப்பிட்டி, புதன்

''மாணவர்கள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கவனிப்பதிலும் அவர்களை...

விஞ்ஞானப்புதுமை

# இசையை ஓவியமாக மாற்றித்தரும் கருவி

## லண்டனில் கண்டு பிடிப்பு

லண்டன், நவ 25

இசையை கணத்திற்குக் கணம் வர்ணஜால ஒளிமயமாக மாற்றிக்கொண்டிருக்கும் அதிசய எலெக்ரோனிக் சாதனம் ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 'சரிஸ்மகிராப்' எனப்படும் இந்தச் சாவனத்தைப் பொறியியல் விஞ்ஞானியும் ஓவியருமான பாரிலோவி உருவாக்கியுள்ளார்.

எந்தவிதமான இசைப்பதிவுத் தட்டுகளையும், ஒலிப்பதிவு நாடாக்களையும் இக்கருவியில் பொருத்தலாம். இக்கருவி ஒரு திரையுடன் மின்கம்பிகளால் இணைக்கப்பட்டிருக்கிறது. இசையின் [illegible]க்கேற்றவகையில் நூதனமான உருவங்களும் படிவங்களும் வர்ண ஜாலங்காட்டி [illegible] தொடர்ச்சியாக அரூப சித்திரங்களைக் காண்பித்துக்கொண்டிருக்கும் ஒத்ததிசைவாக இந்த ஓவியங்கள்வர்ண ஒளிகளால் தீட்டப்படுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இசைக்கு ஒரு புதிய மெருகூட்டிச்செவிக்கும் கண்ணுக்கும் இனிய விருந்தளிக்கும் இந்த நுட்பமான கருவியை வீடுகளில் மட்டுமன்றித் தங்கும் அறைகள், போசனசாலைகள், ஆஸ்பத்திரிகள், விமான நிலையங்கள்போன்ற சகல இடங்களிலும் பாவிக்கலாம்.

எவ்வகையான இசைக்கும் இக்கருவி இயங்கும். ஒலியை ஒளியாக்கி வர்ணவடிவாக்கி இசையின் தன்மையைப் புரிவதற்கும் இக்கருவி [illegible]வாக இருக்கின்றது லண்டனிலுள்ள 'லைட்டிங் ரெக் [illegible] லிமிடெட்' எனப்படும் பொறியியல் நிறுவனம் இக்கருவியை இப்போ...

# அயல்நாட்டு மாணவர் மகாநாடு

மாஸ்கோ, நவ 25

மாஸ்கோவில் கல்வி பயிலும் 85 நாடுகளைச் சேர்ந்த 4000 மாணவர்களின் மகாநாடு இங்கு நடைபெற்றது.

உலக ஜனநாயக வாலிபர் சமேளனத்தின்வெள்ளிவிழாவையொட்டியே மகாநாடு கூடியது.

வியட்நாம், மத்திய கிழக்கு, கலோனியல் மக்கள் போராட்டம் முதலியன குறித்து தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

உலக ஜனநாயக சோஷலிஸ சக்திகள் ஒற்றுமையாக வேண்டுமென்றும் இந்த ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க மாணவர்கள் கோரினர்.

... ...

# விவசாயக் கழகத் தலைவர் கருத்து

வேலணை, புதன்

'எமது 4 எச் கழகம் இலங்கை விவசாயக் கழகத்தைப் போன்றதாகும். எமது இக்கழகம் அமெரிக்காவின் விவசாய விருத்தியில் முக்கிய கவனமெடுத்து வருகிறது. கழக அங்கத்தவர்களை நாட்டுக்குத் தேவையான நல்ல பிரயாசையாக்குகிறோம். இவை மட்டுமல்ல சர்வதேச முயற்சிகளில் உலக மக்களிடையே உடன்பாட்டையும் ஏற்படுத்த முன்நிற்கிறோம். நான்இலங்கையில் தங்கும் காலத்தில் என்னாலான உதவிகளை இங்குள்ள விவசாயிகளுக்குச் செய்வேன்' என வேலணை கலைமகள் சனசமூகநிலையத்தில் கலைமகள் இளைஞர் விவசாயக் கழகத்தினால் நடத்தப்பட்ட மரம்நாட்டு வைபவத்தையடுத்து நடந்தவிழாவின்போது உரையாற்றிய அமெரிக்க 4 எச் இளைஞர் விவசாயக்கழக அதிபர் திரு. சம்கலாங் கூறினார்.

கழகத்தலைவர் திரு. வி. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவின்போது திரு. சும்சுலாங் தொடர்ந்து பேசுகையில் அமெரிக்காவில் கோதுமை, அவரை, பருத்தி என்பன பிரதானமாகப் பயிரிடப்படும் பயிர்களாகும். உணவுப்பொருள் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தியாவதால் பிறதேசங்களுக்கும்...

# 'ஆசிரியர்களுக்கெல்லாம் உதாரணமாக விளங்கியவர்'

## மறைந்த கல்லூரி அதிபருக்கு புகழ் அஞ்சலி

பருத்தித்துறை, புதன்

'ஆசிரியர்களுக்கெல்லாம் உதாரணபுருஷராகவும், கடமைவீரராகவும்வாழ்ந்த திரு. எஸ். பி. நடராசாஎமது நாட்டின் தேசிய வீரராகத் திகழவேண்டியவர். தமது சொந்த விஷயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, பாடசாலை விஷயங்களையே பெரிதாய் கருதும் ஆசிரியர் இன்று விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள். ஆகவே தான் ஆயிரக்கணக்கான ஆசிரியரும் மாணவரும் அவரதுஇறுதிச் சடங்கில் இவ்வளவு அனுதாபத்துடன் பங்குபற்றுகின்றனர்''

இவ்வாறு வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. க மகாலிங்கசிவம், காலஞ்சென்ற செங்குந்தா இந்துக்கல்லூரி அதிபர் திரு எஸ். பி. நடராசாவின் இறுதிச்சடங்கின்போது உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அதிபர் திரு. நடராசாவின் ஈமைக்கிரிகைகளில் வடமாகாணத்திலுள்ள சகல கல்லூரி அதிபர்கள்; கல்விமான்கள் மாணவர்கள் ஆகியோர்கலந்து கொண்டனர்.

யாழ். மத்திய கல்லூரிஅதிபர் திரு. ஈ. சபாலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- 'ஆசிரிய பதவி வகிப்போருக்குச் சில தனிப்பட்ட குணதியங்களும்பண்புகளும் இருக்க வேண்டும். அத்தனை குணதிசயங்களும் பண்புகளும் வாய்ந்த திரு. நடராசாவின் மறைவு ஆசிரிய உலகிற்கும் கல்வித் துறைக்கும் பேரிழப்பாகும்.

யாழ்ப்பாணம் அர்ச் ஜோன் கல்லூரி அதிபர் திரு. க. பூரணம்பிள்ளை, செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு எஸ். ஸி. தேவசகாயம் உட்படப்பலர் உரையாற்றினர்

# 'எதிர்த்துநின்றுஒருபோதும் உரிமை பெற முடியாது'

## ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேச்சு

உரும்பிராய், புதன்

'ஆசிரியர்கள் இந்த நாட்டின் சிறந்த பிரசைகள் நல்ல சந்ததியை உருவாக்கும்பணி அவர்களிடமே உண்டு. ஆசிரியர்கள் தங்கள் தங்கள் பாடசாலைகளைத் தங்கள் உயிரினும் மேலாக மதித்து வந்தார்கள். பழைய முகாமையாளர் காலத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் சேவை மிகவும் பாராட்டக் கூடியதாயிருக்கிறது ஆசிரியர்கள் தமது சேவையை ஒரு தெய்வ சேவையாய் நினைத்தல் வேண்டும். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தையை நல்ல பிரசையாக்க வேண்டிய மனச்சாட்சியோடு கூடிய பொறுப்பு ஆசிரியர்கள் அனைவருக்கும் அத்தியாவசியம் இருக்க வேண்டும்',

வலி வடக்குத் தமிழாசிரிய சங்கமுப்பதாவது வருடாந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வட பிரதேசக் கல்வி அதிபதி திரு வி சங்கரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் சங்கத் தலைவர் திரு வ. கந்தையா தலைமையில்...

...திலேயே பெரும்பாலும் நியமனம் பெற்றார்கள் அறுபது வயதுவரை சேவை செய்யலாம் என்று நம்பி எதிர்பார்த்திருந்த அநுபவம் வாய்ந்த ஆசிரியர்களது சேவை இடைநடுவிற் தறிக்கப்படுகிறது. இது மிகவும் பரிதாபத்துக்குரியது. வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலை வழங்குகின்றோம் என்ற போர்வையில் மனைவி மக்களோடு பெருங்குடும்பப் பொறுப்புள்ள ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை ஒய்வு பெறச் செய்வது மேலும் கஷ்டத்தையே யுண்டு பண்ணும்; நாம் இது பற்றிப் பல தடவைகள் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியும் நல்ல முடிவு இன்னும் ஏற்படவில்லை. நாட்டுக்கே தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்களை சேவை நீடிப்பின்றி மனம் நொந்த நிலையில் ஒய்வு பெறச் செய்வது துரதிர்ஷ்டமே யாகும். ஆசிரியர்களுக்காகப் போராட வேண்டும். இப்பொழுதுள்ள அரசாங்கம் இட மாற்றச் சபைகளை அமைத்து முன்னேற்றமான...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பகுதியில் அவர் கூட்ட இருப்பதாகத் தெரிகின்றது இக்கூட்டத்திற்கு 'குத்து

வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கௌரவப் பிரஜைகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை

கோட்டை, புதன்

உணவுப் பொருட்களை இந் நாட்டுக்கு இறக்குமதி செய்வதில் ஏகபோகம் வகித்து வந்த கௌரவப்பிரஜைகளான இந்திய பாகிஸ்தானிய வம்சாவழியினருக்கு அங்குமில்லாமல் இங்குமில்லாமல் நிச்சயமற்றதோர் நிலை ஏற்படப்போகின்றதாம்

'தவஸ' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

ஜனவரிமாதம் முதல் அரசாங்கத்தின்வர்த்தகக்கார்ப்பரேஷன் நடைமுறைக்கு வருவதால் மேற்சொன்னவர்கள் இதுவரைகாலமும் நடத்திவந்த தொழில்கள் பறிபோவதுடன் அங்குமிங்கும் போய்வரும் சந்தர்ப்பமும் இல்லாமல் போகும் என்று அச்செய்தி கூறுகின்றது.

கௌரவப்பிரஜைகள் இந்த நாட்டின் பிரஜைகள் என்றே இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கருதப்படுவதால் அங்கும்அவர்களுக்கு குடியேறும் வாய்ப்பு கிடைக்காது என்று கருதப்படுகிறதாம்.

வடக்கில்

# படகு சேவையை இ. போ. ச. நடாத்தும்?

கோட்டை, புதன்

வடக்கிலுள்ள படகு சேவையை இலங்கைப் போக்குவரத்துச்சபை பொறுப்பேற்கவேண்டுமென நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலையமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா சிபார்சு செய்துள்ளார்.

தற்போது இந்தப் படகு சேவை நெடுஞ்சாலையமைச்சினாலேயே மேற்கொள்ளப் படுகிறது. இந்தப் படகு சேவையை இ. போ. ச. எடுத்து நடாத்தினால் பிரயாணிகளுக்கும் குறிப்பிட்ட நேரங்களில் பிரயாணம் செய்வதற்கு இலகுவாகவிருக்கும் எனவும் அதே நேரத்தில் ஒரே டிக்கட்டில் இவ்விரு கடல் தரை பிரயாணம் இரண்டையும் தொடர்புபடுத்தி விடலாம். எனவும் போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனவுக்கு மைத்திரிபாலசேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

## உல்லாசப் பிரயாணசேவை

கோட்டை, புதன்

கோட்டை சதாம் வீதியிலுள்ள இலங்கை தேயிலை நிலையத்திலிருந்து இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம் உல்லாசப் பிரயாணச் சேவையொன்றை அடுத்த மாதம் 3-ந் திகதி ஆரம்பித்துவைக்கவிருக்கிறது. இச்சேவையை கப்பல்துறை உல்லாசப்பிரயாண வர்த்தக அமைச்சர் திரு. பி. பி. ஜி. ஹலுகல்ல ஆரம்பித்து வைப்பார்.

## நாட்டின் செல்வங்கள் குழந்தைகளே

யாழ்ப்பாணம், வியா

'வடபகுதி மக்கள் கற்றவர்களாதலால் கல்வியின் பயனை உணர்ந்தவர்கள். இதனால்தான் தமது குழந்தைகளின் கல்வியில் அவர்கள் அதிககவனம் செலுத்துகிறார்கள். குழந்தைகள் மலர் போன்றவர்கள் மாலையில் உதிர்வோமென்பது மலர்களுக்குத் தெரியாது. உதிரப் போகும் மலர்களாகிய நாம் அரும்பிய மலர்களாகிய குழந்தைகளைப் பேணவேண்டும். நாட்டின் செல்வங்கள் குழந்தைகளே. பணத்தைப் பெட்டியில் பூட்டிவைக்காது குழந்தைகளின் முன்னேற்றத்திற்குச் செலவு செய்ய வேண்டும்'.

இவ்வாறு வண்ணை சிறுவர் பாடசாலை பெற்றோர் தின விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் மேயர் திரு சி. நாகராசா பேசும்போது' 'அரசினர் சிறுவர் பாடசாலைகளை ஏற்று நடாத்தலாம் என்ற செய்தியால் பல சிறுவர் பாடசாலைகள் சுயநலத்தின் அடிப்படையில் தோன்றும் இவ் வேளையில் கடந்த ஏழு வருடங்களாக ஸ்ரீவண்ணை சிறுவர்பாடசாலை சிறந்த சேவையாற்றி வருகிறதென்று பாராட்டினார்.

திருமதி நாகராசா பரிசில்களை வழங்கினார். ஆசிரியர் திரு.கார்த்திகேசு, திரு பீ. மதிமுகராசா ஆகியோரும் பேசினர். செல்வி எஸ். இராஜேஸ்வரி நன்றி கூறினார். சிறுவர்களின் கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

நாவலப்பிட்டி, புதன்

"மாணவர்கள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கவனிப்பதிலும், அவர்களுக்கு ஆர்வம் காட்டுவதிலும் தான் பெற்றோர் ஆசிரியர் சங்கம் முக்கிய கவனம் எடுக்கவேண்டும். அத்தகைய தொரு ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் தரும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் உருவானால் ஒரு கல்விக் கூடம் தானாகவே உயர்நிலை அடையும்."

இவ்வாறு நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாலய அதிபர் திரு. அ ராஜகோபால் மேற்படி கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலயத்தின் நாமகள் மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் கருத்துரை வழங்கிய திரு, சி. சாரங்கபாணி பேசுகையில் மலையகப்பிள்ளைகளுக்கு நல்ல வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தால் ஏனைய பகுதி மாணவர்களுக்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிருபிக்கும் வாய்ப்பை அவர்களும் பெறமுடியும் இத்தகைய சூழ்நிலையை பெற்றோர் ஆசிரிய சங்கமே ஏற்படுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார். மேற்படி சங்கத்தின் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் திரு. அ. ராஜகோபால், உபதலைவர்கள் திரு, செ பொ. இலட்சுமணன், திரு. கதிரேசன். செயலாளர் ஆ. இராமநாதன், உபசெயலாளர் திரு. டி. ஜி பீலிக்ஸ், தனாதிகாரி திரு. கிருஷ்ணமூர்த்தி, உப தனாதிகாரி திரு. என்.பாலசுப்ரமணியம் பன்னிரெண்டு பேர்களைக் கொண்டசெயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

படிவங்களும் வர்ண ஜாலங் காட்டி விநாடிக்கு விநாடி தொடர்ச்சியாக அரூப சித்திரங்களைக் காண்பித்துக் கொ[..]டிருக்கும். இசையின் தன்மைக்கும் உணர்ச்சி நிலை[..]னிலுள்ள 'லேட்டிங் ரெக்னோலஜி லிமிடெட்' எனப்படும் பொறியியல் நிறுவனம் இக்கருவியை இப்[..]பொழுது உற்பத்தி செய்[..]ல் ஈடுபட்டுள்ளது.

படும் பயிர்களாகும். உணவுப்பொருள் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தியாவதால் பிறதேசங்களுக்கும் ஏற்றுமதியாகிறது' எனக் கூறினர்.

தமிழ் நாட்டில்

# தி. மு. க.- சுதந்திரா துண்டிப்பு: ஜனசங் வரவேற்பு

சென்னை, நவ 25

தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களுக்காக உடன்பாடுகளைச் செய்துகொண்டுள்ள ஏழு முக்கிய கட்சிகள் அடுத்த பொதுத்தேர்தலிலும் இந்த உடன்பாட்டைத் தொடர்ந்து செயல்படுத்திக்கொள்ள அந்தக் கட்சிகள் முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்த உடன்பாட்டு ஏற்பாட்டைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளவும்அபிவிருத்திசெய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களில்திராவிடமுன்னேற்றக்கழகம், பாரதி கம்யூனிஸ்ட்கட்சி, முஸ்லிம் லீக், பார்வார்ட்புளக், தமிழரசுக்கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி,இந்திராசார்பு காங்கிரஸ் கட்சி ஆகியவை போட்டி தவிர்ப்பு உடன்பாடு செய்து கொண்டுள்ளன.

அதேசமயம் சுதந்திரா, ஜனசங், சின்டிகேட் காங்கிரஸ் ஆகியவையும் தமக்குள் போட்டிதவிர்ப்பு ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகத் தெரிகின்றது

திராவிடமுன்னேற்றக் கழகத்துடன் இருந்த ஒத்துழைப்பு ஏற்பாடுகளை சுதந்திரக் கட்சி வாபஸ் பெற்றுக்கொண்டதை ஜனசங் வரவேற்றுள்ளது. ஜனநாயகக் கட்சிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு வருவதையே இது காட்டுவதாக ஜனசங்கட்சி குறிப்பிட்டுள்ளது.

கிழக்குப்பாகிஸ்தான்

# நிவாரண வேலைகளில் சர்வதேசக் குழுக்கள்

டாக்கா, நவ. 25

கிழக்குப் பாகிஸ்தானில் சூறுவளியினாலும் கடல் எழுச்சியினாலும் அழிவுகள் ஏற்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளில் சர்வதேச உதவிக்குழுக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

30 ஹெலிகொப்டர்களும் 60 விசைப் படகுகளும் தீவிரமான உதவிப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. உணவுப் பொட்டலங்களையும், மருந்து சாமான்களையும், உடுபுடவைகளையும் இவை விநியோகித்து வருகின்றன. அழிவுக்குள்ளான தீவுகளின் கரைகளில் கிடக்கும் பிணங்களைக் குழிதோண்டிப் புதைப்பதில் பாகிஸ்தான் ராணுவம் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே ஆயிரக்கணக்கான சடலங்களை ராணுவம் புதைத்துள்ளது.

சியாட்டோ ஸ்தாபனம் 500 ஆயிரம் டொலர் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

பிரிட்டிஷ், அமெரிக்க, மேற்கு ஜெர்மன், ஹெலிகொப்டர்களும் நிவாரணங்களில் ஈடுபட்டுள்ளன

பாதிக்கப்பட்ட இடங்களை அதிபர் யாஹ்யாக்கான் விமானத்தில் பறந்து சுற்றிப் பார்க்கவிருக்கிறார்.

## இடமாற்றம் ரத்து

அம்பன், புதன்

தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவிலிருந்து வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நாரந்தனை கிராமசேவையாளர் திரு, ஏ. பி. புண்ணியமூர்த்தியின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் நாரந்தனைக்கே கிராமசேவையாளராகக் கடமையாற்றுவார்.

## ஒழுககத்தால் கல்வி சிறக்கும்

பருத்தித்துறை, புதன்

மாணவரின் ஒழுக்கம் சிறந்தால் கல்வியும் சிறக்கும். ஒழுக்கம் குறைந்தவர்கள் கல்வித்துறையில் முன்னேற வியலாது. கல்வியென்பது கடையில் வாங்கும் பொருளன்று.'

இவ்வாறு வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி உயர்தர மாணவிகள் மன்ற வருடாந்த இரவுப் போசன விருந்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு எஸ். கந்தசாமி கூறினார்.

இவ் வைபவத்திற் கலந்து கொண்ட வடமாநிலக் கல்வியதிபதி திரு வி. சங்கரலிங்கம் கூறியதாவது:

'எவருக்கும் திறமையின் அடிப்படையில் தொழில் வழங்குவதே சிறந்தது. ஆனால் அரசியல் தலையீடுகள் அரசாங்க நியமனங்களில் இருப்பது விரும்பத்தக்கதல்ல, இவ்வித நியமனங்களால் நிர்வாகச் சீர்கேடுகள் பெருகுவதற்கு வழி பிறக்கலாம்.

உடுப்பிட்டி எம். பி. திரு க, ஜெயக்கொடி, அதிபர் செல்வி கே. சரவணமுத்து ஆகியோரும் பேசினர்.

## கிராம சபைத் தேர்தல்கள்

முசலி, புதன்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாந்தை வடக்கு (அடம்பன்) கிராமச்சபையினதும் மாந்தை தெற்கு (உயிலங்குளம்) கிராம சபையினதும் தேர்தல்கள் இம் மாதம் 30-ம் திகதியும் டிசம்பர்மாதம் 2-ம் திகதியும் நடாத்தப்படுமென்று மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் உத்தியோகஸ்தர் திரு எஸ். கந்தசாமி அறிவித்துள்ளார்,

கரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் சங்கத் தலைவர் திரு வ.கந்தையா தலைமையில் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அண்மையில் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது.

வலி வடக்குத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. வே,சின்னையா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு வ. பொன்னம்பலம் பேசுகையில் 'தற்போதுள்ள அரசாங்கம் சோஷலிசப் பாதையில் முன்னேறிக் கொண்டு செல்கிறது. தமிழர்களாகிய நாங்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன் மூலமே உரிமைகளைப் பெற முடியும். எதிர்த்து நின்று ஒருபோதும் உரிமைகளைப் பெற முடியாது நமது நாடு சோஷலிசப் பாதையில் முன்னேற. பொருளாதார விருத்தி மேம்பட ஒவ்வொரு ஆசிரியரும் உழைக்க முன்வரவேண்டும்' என்றார்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச பொன்னுத்துரை பேசுகையில் 'இப் பொழுது ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டோர் ஓய்வு பெறுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள் இவர்கள் யாவரும் முகாமையாளர் காலத்

காகப் போராட வேண்டும். இப்பொழுதுள்ள அரசாங்கம் இடமாற்றச் சபைகளை அமைத்து முன்னேற்றமான காரியங்களைச் செய்து வருவதும் பாராட்டத் தக்கதே' யென்றார்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவின் போது திருவாளர்கள் வ. கந்தையா, வே.சின்னையா,எஸ். நவரத்தினம் ஆகியோர்கள் முறையே, தலைவர் காரியதரிசி. தனாதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். நிர்வாக சபையும் தெரிவுசெய்யப் பட்டது.

## மத்தியஸ்தர் தீர்ப்புக்கு ஆட்சேபம்

பருத்தித்துறை, புதன்

இம்மாதம் யாழ். பாடசாலைகளின் விளையாட்டுச் சங்க ஆதரவில் நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றில் மத்தியஸ்தர் தவறுதலாகவோ வேண்டுமென்றோ பாரபட்சமாக நடந்து கொண்டார் என வடமராட்சிப் பாடசாலை விளையாட்டு ஆசிரியர் ஒருவர் மேற்படி சங்கச் செயலாளரிடம் புகார்செய்துள்ளார்.


# செல்லாக்காசல்ல

1971-ம் வருடத்துக்கு செல்லுபடியாகும்

அனைத்துலகு - சகல சமூக, சமய, சமரச, சன்மார்க்க சித்திரங்கள் 551 அடங்கிய

லீலா பஞ்சாங்க

# சித்திரக் கலண்டர் லீலா டயறிகள்

லீலா டயறிகள் தமிழ், ஆங்கில, சிங்கள மும்மொழிகளில் தனித்தனி 45 விதம் வெளியிட்டுள்ளோம். கேட்டுப் பார்த்து வாங்கிப் பாவியுங்கள்.

வியாபாரிகள் வடமாகாணத்தில் லீலா ஸ்டோர்ஸ் நியந்தனைக்கிணங்க எமது விலைப்பட்டியல் விலைக்கு தொகையாக கீழ்க்காணும் விலாசத்தில் வாங்கலாம்.

செ, ஆ. செ. அன் கோ.,

ஆசுப்பத்திரி வீதி, பெரியகடை,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாவை அடக்கி விக்கல் எழும்போது ஒன்றைச் செய்தலே அன்றிச் சொல்லலும் கூடாமையாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையாலும், மோக்ஷத்திற்கு ஏதுவாகிய புண்ணியத்தை நாம் விரைந்துசெய்யவேண்டும்.

— நாவலர்:


# ஈழநாடு

Eelanadu Ceylon Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna; Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 11-ந் திகதி (26-11-70)


## சபாஷ்! யாழ்.மாணவர்கள்

யாழ்ப்பாணத்திலே நேற்று முன்தினம் பல கல்லூரி மாணவர்களும் முதல்முதலாக நடத்திய பெரிய ஆட்சேப ஊர்வல ஆர்ப்பாட்டம், ஒழுங்கான முறையிலே அமைதியாக நடந்ததாக பொலிஸ் அதிபரே பாராட்டியிருக்கிறார். இது நமது மாணவர்களின் மேலான பண்புக்கு நற்சான்றாகும். இதற்காக நமது மாணவர்களைப் போற்றுகின்றோம். இந்த நற்பெயருக்கு இழுக்கு ஏற்படாமல் அவர்கள் இனியும் கவனமாக இருக்கவேண்டும்.

கொழும்பில் பல்கலைக் கழகம் திறந்த தினத்தன்றே மூடிவிடவேண்டிய அளவுக்கு அங்கு நிலைமை கட்டுக்கடங்காமல் போயுள்ளது. அத்துடன் ஒப்பிடும்போது இங்கு நிலைமை எவ்வளவு மேல் என்பதை உணரலாம்.

கொழும்பில் ஒரு சிறிய சம்பவம், மிகப் பெரிதாகி, திகைக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்து பெரும் நாசங்களை விளைவித்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்திலோ, மாணவர்களின் மனம் உடைந்துவிடக்கூடிய காரணங்கள் இருப்பினும் அவர்கள் பலரும் எதிர்பார்த்ததைவிட மிகக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டிருக்கின்றார்கள்.

மாணவர்களின் முக்கிய நோக்கம், படித்து பரீட்சையில் தேறுவதுதான். அரசியல் முதலிய நேரடி கிளர்ச்சிகளில் அவர்களை இழுத்துவிட சில சுயநலமிகள் முயலக்கூடும், வகுப்புத் துவேஷங்களையும் மூட்டிவிடலாம். அவ்விதமானவர்களிடம் சிக்காமல் நமது மாணவர்களை அதிக கவனமாக இருந்து, தங்கள் முக்கிய நோக்கத்தை வெற்றியாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டும்.

இவ்வித ஊர்வல ஆர்ப்பாட்டங்களை நடத்தியிராத நமது மாணவர்கள் இப்போது இவ்வளவு பெருந்திரளாகக்கூட ஊர்வலம் நடத்தியதிலிருந்து அவர்களது உணர்ச்சியையும், கவலைகளையும் உணர்ந்து, அவர்களுக்கு ஆறுதலும் பரிகாரமும் ஏற்படக்கூடிய வழியில் உடனடியாகத் தக்கநடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். தவறுகள் செய்வது யாருக்கும் சகஜம். ஆனால் செய்யப்பட்ட தவறுகளை எடுத்துக் கூறியதும், அவற்றைத் தாமதமின்றி திருத்திக் கொள்வதே அறிவுடைமையாகும்.

தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டுமென்று அடிக்கடி கூறும் அரசாங்கம், எந்த விஷயத்தையும் வகுப்புவாதக் கண்களுடன் பார்க்கமுடியாது. நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின், நாட்டிலுள்ள திறமையைப் பூரணமாகப் பயன் படுத்த வேண்டும். திறமைசாலிகள் யாராயினும் அவர்கள் நம்நாட்டின் பொதுச்செல்வம். திறமைக்கே முதலிடம் அளிக்க வேண்டும். உறுதியான அவ்வித கொள்கைதான் வகுப்புவாதப் பிளவுகளுக்கு இடமளிக்காமலும் நாட்டின் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் வளர்ப்பதாகவும் இருக்கும்.

இதேசமயம் சிறப்பாகத் தமிழ் மாணவர்கள், உத்தியோகத்துக்காக இனி அரசாங்கத்தை அதிகம் எதிர் பார்க்கமுடியாது. வேலையில்லாப் பிரச்னையை அவரவர்களே தீர்த்துக்கொள்ளக் கூடிய முயற்சி எடுப்பது தான் விவேகமாகும். சம்பள அடிமைகளாக ஆகும் நோக்கத்தை விட்டு, சுதந்திரத் தொண்டர்களாகப்

### சேர் பொன். இராமநாதன் நினைவு தினம்

# தமிழர் தலை நிமிரச் செய்த தலைவன்

அரசியல் ஞானம், அஞ்சாத நெஞ்சம், இணையற்ற பேச்சு வன்மை, தமிழில் புலமை, சைவத்தில் பற்று இவை யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு தமிழ்த் தலைவன் இலங்கையின் சரித்திரத்தில் இருந்தாரானால் அவர் சேர் பொன்னம்பலம் இராமநாதனே. தமிழர்க்கு மட்டுமின்றி இலங்கை வாழ் சிங்களவர், முஸ்லிம்கள் எல்லோருக்குமே தலைவனாய் நின்று விடுதலைப் போராட்டம் நிகழ்த்தி, ஈழத்து தமிழர்குலத்துக்கு என்றென்றும் அழியாத பெருமையையும் மதிப்பையும் பெற்றுத், தமிழர் தலை நிமிர்ந்து நடைபோடச் செய்தவர் இராமநாதன் பெரியார். அவர் நம்மை விட்டுப் பிரிந்து சரியாக நாற்பது வருடங்களாகின்றன.

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையின் தேசிய வாழ்வில் சிறப்பான பங்கெடுத்துக்கொண்டது சேர் இராமநாதன் குடும்பம். இலங்கையருள் முதன்முதலாக 'பாரிஸ்டர்' பட்டமும், 'சேர்' பட்டமும் பெற்ற இவருடைய மாமனார் சேர் முத்துக்குமாரசாமி சட்டசபை அங்கத்தவராயிருந்த போது இலங்கையருக்கு கூடுதலான அதிகாரங்களும் சலுகைகளும் தரவேண்டுமென்று பிரிட்டிஷ் ஆட்சியாளரோடு அச்சமின்றிப் போராடினார். இங்கிலாந்தின் பிரதம மந்திரிகளாயிருந்த டிஸ்ரெயிலி, பாமஸ்டன் பிரபு, ஹௌட்டன் பிரபு முதலியோருடன் நண்பனாயிருந்து பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தோடு மிகவும் நெருக்கமாகப் பழகி வந்தாராயினும் சேர் முத்துக்குமாரசாமி கடைசி வரை தேசியவாதியாகவே இருந்த

சாங்கத்தை அச்சமின்றி எதிர்த்துக் கண்டனம் செய்யும் 'நெருப்புக்கொள்ளி' என்ற பட்டம் இவருக்கு விரைவில் கிடைத்துவிட்டது. இலங்கையின் அரசியல் சுதந்திரத்திலும் சட்ட சீர்திருத்தங்களிலும் முதன்முதலாக அக்கறை காட்டிய இலங்கை தேசிய சங்கத்தை 1885ல் தோற்றுவிக்க இராமநாதன் காரணமாயிருந்தார்.

---

**வி. என். பி.**

---

இதற்குப் பின் சொலிசிட்டர் ஜெனரல், அட்ரோர்னி ஜெனரல் ஆகிய அரசாங்கப் பதவிகளை சில காலம் வகித்துவிட்டு சேர் இராமநாதன் தமது ஐம்பத்தாறுவது வயதில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1911-ம் ஆண்டு 'கல்வியறிவுள்ள இலங்கையர்'ருக்கு சட்டசபையில் ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டபோது மிகவும் கியாதி பெற்ற சேர் மார்க்கஸ் பெர்னாந்து என்ற சிங்களவருடன் போட்டியிட்டு சேர் இராமநாதன் வெற்றி பெற்றது பெரும்பான்மை மக்களுக்கிடையே இவருக்கிருந்த மதிப்பையும் நல்லெண்ணத்தையும் நிரூபிக்கிறது. 1920 வரை இப்பதவியிலிருந்தபோதுதான் தமது ஒப்பற்ற அரசியல் ஞானத்தையும் அயராத உழைப்பையும் தளராத திட சித்தத்தையும் மக்களின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தினார். 1915இல் சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம் எழுந்தபோது அவர் லண்டனுக்கு தூது போய் வெற்றி கண்ட கதை யாவரும் அறிந்ததே.

1919-ம் ஆண்டு டிசம்பர் 11-ம் திகதி இலங்கைதேசிய காங்கிரஸ் முதன்முதலாக கூடியது. இவருடையசகோதரர் சேர் பொன் அருணாசலமே அதன் முதலாவது தலைவர் இக் கூட்டத்தில் சட்டசபை, நிர்வாகசபைகள் சீர்திருத்தப்படவேண்டுமென்றும் அரசாங்க சேவை இலங்கையர் மயமாக்கப்படவேண்டுமென்றும் சேர் இராமநாதன் பிரேரித்தார்.

இக் கிளர்ச்சிகளின் பலனாக சட்டசபையில் உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களுக்கு பெரும்பான்மை பலம்கிடைத்தது. புதிய சபையில் சேர் இராமநாதன் கவர்னரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவரானார், பெரும்பான்மை இனத்தவர்களும் இவரையே சட்டசபையில் தங்கள் தலைவராகவும் வழிகாட்டியாகவும் அங்கீகரித்தனர். இலங்கைப் பிரதிநிதிகளுக்கு கூடுதலான அங்கீகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற அரசியல் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றதன் விளைவாக 1924-ல் சட்டசபையில் மேலும் மாறுதல்கள் ஏற்பட்டன. முதன்முறையாக இலங்கையின் சுயராஜ்யத்துக்கு அப்போதுதான் அஸ்திவாரமிடப்பட்டது.

1928ல் டொனமூர் அரசியல் திருத்தங்கள் வெளியாகின. 1930-ல் இலங்கையருக்கு ஓரளவு சுதந்திரமும் சலுகைகளும் வழங்கும் புதிய அரசாங்கசபை ஏற்பட்டது. ஆனால் சேர் இராமநாதன் இதில் கலந்து கொள்ள முடியவில்லை. அவ்வருடமே அவர் மரணமானார்.

மாமனார் சேர் முத்துக் குமாரசுவாமிக்கு தென்னிந்தியாவிலிருந்த செல்வாக்கின் பயனாக இலக்கணம் இராமசாமிப்பிள்ளை என்ற சிறந்த கல்விமான் கொழும்புக்கு வரவழைக்கப்பட்

### பொன்னியல்

### சேர் பொன். இராமநாதன்



## ஜெயாறன் எழுதுவது:

ஈழஅன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வரான சேர். பொன்னம்பலம் இராமநாதரின் நினைவு நாளாகியஇன்று இங்கு பல உள்ளங்கள் அப்பெருமானாரை நன்றியுடன் நினைக்கும். செயற்கரிய பெரியாரல்லவா அவர்!

பல்துறைகளிலும் அவர் செய்துள்ள நற்பணிகளை விளக்குவதாயின் அது மிக விரியும். இந்நாட்டிலுள்ள இரு பெரிய சமூகத்தவரிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்த, அந்த அரசியல் ஞானி தீர்க்கதரிசனத்துடன் செய்துள்ள பெரும் பணி ஈழத்துச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும், அப்பணியில் சிங்கள சமூகத்தின் நன்றியை அவர் அமோகமாக பெற்றுள்ளார். அந்த நன்றியே இன்றும் ஈழத்துத் தமிழ் சமூகத்துக்கு மேலான பாதுகாப்பாகும்.

இக்காலத்தில் அதை எல்லாம் சில இளம் சந்ததியினர் மறந்திருக்கலாம். அவர் செய்த பணிகளையும் அவர் தம் வாழ்க்கைமூலம் காட்டியுள்ள மேலான வழியையும். எதிர்கால சந்ததியினரும் மறக்காமல் இருப்பது நாட்டுக்குப் பலவிதங்களிலும் நன்மையாகும். நன்றிக்கறிகுறியாக பார்லிமெண்ட் சபைக்கு வெளியே அவரது உருவச் சிலையை வைத்திருக்கிறார்கள் தான். ஆனால் அது மட்டும் போதாது, அவரது உயரிய வாழ்க்கையையும் அவர் பல துறைகளிலும் செய்துள்ள அரும்பணிகளையும் சிங்களம், தமிழ், இவ்விருபாடப் புத்தகங்களிலும் விளக்கிச் சேர்க்க வேண்டும். துரதிருஷ்டவசமாக இந்நாட்டிலுள்ள இரு சமூகத்தவருக்கும் நல்லுறவும் நட்பும் ஏற்படாத முறையிலே இதுவரை சரித்திர பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டவர்களின் சூழ்ச்சிகளில் இதுவுமொன்று சுதந்திர இலங்கைக்கு தேசிய ஒற்றுமை மிக மிகத் தேவையாதலால், அதற்கானமுறையில் பாடப்புத்தகங்களையும் சரித்திர நூல்களையும் திருத்தி அமைக்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். தேசிய ஒற்

கட்டி பல குருக்கள் மார்களை வைத்து, நித்திய நைமித்தியங்களை விதிதவறாமல் செய்ய ஏற்பாடு செய்தாராம். அதுபோல் ஒரு கோயிலை இன்றுகட்டயாரும் நினைக்கவும் முடிகிறதா? அக் கோயில் உள்ளவரை அப் பெரியாரின் நினைவு அழியமுடியாது. அக்கோயிலுக்கு அதிகசொத்துக்கள் உள்ளனவாம் அந்த வருமானத்தைக் கொண்டு சைவப்பணிகளை மேன்மேலும் செய்தால் ஈழத்துச் சைவசமூகத்தின் நன்றி அவருக்கு மேன்மேலும் கிடைக்கும்.

0 0 0

யாழ்ப்பாணத்திலே அவர் அமைத்துள்ள இரு பெரிய கல்லூரிகளும் அவரது இரு கண்மணிகள். அவற்றைப் பொறுப்பேற்று நடத்தும் அரசாங்கத்துக்கு ஒருகடமையுண்டு. வடக்கே ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்கான சரியான இடத்தை இந்த அரசாங்க அதிகாரிகள் தேடுகிறார்களாம். அதற்கான இடத்தை ஏற்கனவே அப்பெரியார் ஒழுங்கு செய்தே வைத்திருக்கிறார். அதை அரசாங்கம் பயன் படுத்துவது, பலவிதங்களில் மேலாவதுடன், அதுவே அவ்வள்ளலுக்குச் செய்யும் நன்றியும் மேலான மரியாதையுமாகும்.

0 0 0

உள்ள முன்கி உகந்து
சிவனென்று
மெள்ளவுள்க வுள்க வினை
கெடுமெய்ம்மையே
புள்ளினார் பணி புள்ளிருக்கு
வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித்
தொழுமினே.

— அப்பர் அடிகள்.

## நூற்றாண்டு கொண்டாடும் கல்லூரி

முசலி, புதன்

மன்னார் மாவட்டத்தில் பழமைமிக்க கல்லூரியாகத் திகழும் புனித சவேரியார் கல்லூரி தனது 100 வது ஆண்டு நிறைவு விழாவை அடுத்தமாதம் 2-ம் திகதி கொண்டாட விருக்கிறது. இதற்கான ஆயத்தங்களை இக்கல்லூரிப் பழைய மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களே அதிக கவன மாக இருந்து, தங்கள் முக்கிய நோக்கத்தை வெற்றியாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டும்.

இன்று ஏற்பட்டுள்ள சோதனை மிக்க நிலையில், மாணவ உலகம் பொதுவாக மிகவும்கவலையடைந்துள்ளது அதிலும் சிறப்பாக தமிழ் மாணவர்களின் நிலைமையை விளக்கத் தேவையில்லை, இதுவரை

கூடிய முயற்சி எடுப்பது தான் விவேகமாகும். சம்பள அடிமைகளாக ஆகும் நோக்கத்தை விட்டு, சுதந்திரத் தொண்டர்களாகப் பணி செய்வதற்கான முறையை தங்கள் வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்வதே, அவர்களது எதிர்காலம் ஏமாற்றங்கள் இன்றி மேலான முறையில் அமைய வழிசெய்யும்.

ஆளும் வர்க்கத்தோடு மிகவும் நெருக்கமாகப் பழகி வந்தாராயினும்சேர்முத்துக் குமாரசாமி கடைசிவரை தேசியவாதியாகவே இருந்து இலங்கைக்கு பல நன்மைகளைத் தேடிக்கொடுத்தார். 1879இல் இவர் இறந்த போது 'இரண்டு கோடி செரச்சம் திராவிட இனத்தின் தலைசிறந்த மனிதர்' என்று 'ஒப்ஸேவர்' பத்திரிகை அவரை வர்ணித்தது. இவர் ஆரம்பித்த தேசிய நற்பணியை இவருடைய மருமக்களாகிய சேர் பொன். இராமநாதனும், சேர் பொன் அருணாசலமும். தங்கள் வாழ்நாட் காலத்தில் தொடர்ந்து திறம்பட நடாத்தினார்கள். சட்டசபையில் இவருடைய இடத்தை இருபத்தெட்டு வயதான இராமநாதன் நிரப்பினார். அர



மன்னவையி லொரு மணியாய்
மருவலர்தம் வயமிழக்க மழை
பெய் மேகந்
தன்னிகர்பன் னூலுரைகள்
தந்த கடலத்துவித சைவஞானி
என்னலமும் பிறர் நலமா
யெவ்வுயிரும் தன்னுயிரா
எண்ணும் மேதை
பொன்னியல் சேர் பொன் ராமநாத
னெனும்
புரவலர் கோன் புகழ்மிக் கோனே

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அனுப்பியவர்:- அ. ஜெயமலர்

தியாவிலிருந்த செல்வாக்கின் பயனாக இலக்கணம் இராமசாமிப்பிள்ளை என்ற சிறந்த கல்விமான் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டார். இவரே சேர் இராமநாதன், சேர் அருணாசலம் இருவருக்கும் தமிழையும் சைவத்தையும் போதித்து மேனாட்டு நாகரீக மோகத்திலிருந்து அவர்களை காப்பாற்றியவர். இராமசாமிப் பிள்ளை அவர்களின் பேரனே சேர்இராமநாதனின் மகளை விவாகம் செய்துகொண்ட சு. நடேசபிள்ளை ஆவார்கள்.

சேர் இராமநாதனையும் அவர் தமிழருக்கும் சைவத்துக்கும் கல்விக்கும் செய்து போனதொண்டினையும்ஈழத்துத் தமிழர் உலகம் உள்ள வரையில் மறக்க மாட்டார்கள்.

யில் பாடப்புத்தகங்களையும் சரித்திர நூல்களையும் திருத்தி அமைக்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். தேசிய ஒற்றுமைக்கு மாறான விஷயங்கள், சரித்திர உண்மையாக இருப்பினும்கூட அவற்றை அடியோடு நீக்கி, ஒற்றுமையைப் பலப்படுத்தும்படியான விஷயங்களை மட்டுமே பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் சேர்க்க மக்கள் அரசாங்கம் ஆவன செய்யக் கடமைப் பட்டுள்ளது. அவ்வித ஏற்பாட்டிலே சேர். இராமநாதனின் வாழ்க்கையும் தொண்டும் முக்கிய இடம்பெறுவதாக இருக்கும்.

0 0 0

நேற்றுக்காலை ஓர் அன்பர் டெலிபோன் செய்தார். ஒரு சமூகம் சேர்ந்து செய்ய முடியாத ஒரு பெரும் பணியை சேர் இராமநாததுரை செய்ததாகவும் அவர் ஒருவரே கொழும்பிலே கருங்கல் திருப்பணியாக ஒரு பெரிய சிவன்கோயில் கட்டியுள்ளதையும் நன்றியுடன் குறிப்பிட்டு அவரது மனதிலே ஏற்பட்ட ஒருமுக்கியமான மாறுதலைப் பற்றி கூறினார். அக்கோயிலைக் அவர் கட்டுமுன், ஏன் ஒரு கல்லுக்கு இவ்வளவு பாலும், இளநீரும் கொட்டி வீண் செய்யதுவண்டுமென்றும், மூன்று குருக்கள்மார் போதாதா என்றும் கேட்டாராம். அப்படிக் கேட்டவர் பின்னர் பெரும் செலவில் ஈழமே பெருமை கொள்ளும்படியான ஒரு சிவாலயத்தைக்

ஆண்டு நிறைவு விழாவை அடுத்தமாதம் 2-ம் திகதி கொண்டாட விருக்கிறது. இதற்கான ஆயத்தங்களை இக்கல்லூரிப் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் செய்துவகின்றனர்.

இப்பாடசாலை அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான சவ் சகோதரர் ஹிலாறிஜோசப்பும் மன்னார் புனித சவேரியார் கல்லூரி பழைய மாணவர் சங்கக் காரியதரிசி திரு. என். விஸ்திறின் டோறஸும் விழா ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர்.


## ஒய்வுபெறுகின்றனர்

பருத்தித்துறை, புதன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. க. சிவசிதம்பரம் இவ் வருட இறுதியுடன் ஒய்வு பெறுகிறார். வதிரி றோமன் கத்தோலிக்கப் பாடசாலைத் தலைமையாசிரியை வண. சகோதரி எஸ், சபீனு திருமதிகள் ஏ. அகஸ்தீன்' அக்னேஸ் அந்தோனிப் பிள்ளை, எஸ், ஆறுமுகம் ஆகியோரும் ஒய்வுபெறுகின்றனர்.

## நாவலர் விழா

பண்டத்தரிப்பு, புதன் நாவலர் நினைவுதினத்தையொட்டி நாவலர் விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது இளவாலைமெய்கண்டான் வித்தியாசாலையிலிருந்து இளவாலை பிரதான வீதி வழியாக முள்ளானை சனசசபை வித்தியாசாலைக்கு நாவலரின் திருஉருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது நாவலர் பற்றிய பேச்சுகள் இடம் பெற்றன மாணவர்களின் கதம்பநிகழ்ச்சிகளும் நடைபெற்றன அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் நடாத்தப்பட்ட நாவலர் நினைவுதினக் கட்டுரைப் போட்டியல் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# றமழான் குரலொலி



''ஒரு மனிதன் உண்ணும் உணவுகளில் சிறந்தது அவனது சம்பாத்தியத்தால் உண்ணும் உணவே''

(நபிமொழி: கூறுபவர்: ஆயிஷா (றழி) ஆதாரம்: அபூதாவூத்)

''நாயகமே! சம்பாத்தியத்துள் எது மிகச் சிறந்தது என வினவப்பட்டது. அதற்கு நபி அவர்கள் தன்கரத்தால்செய்யும் எல்லாத் தொழில்களும், இன்னும் குற்றமற்ற வியாபாரமும் நல்லசம்பாத்தியமே என்றுரைத்தார்கள்''

(அல்ஹதீஸ்: கூறுபவர்: ருபிஉப்னு குதைஜ் (றழி) ஆதாரம்: அஹ்மத்)

ஒவ்வொரு மனிதனும் தன்னுடையவும் தன் குடும்பத்தினுடையவும் ஜீவனோபாயத்தைப் போக்கிக்கொள்வதற்கு உழைத்து ஊதியம் பெறல் வேண்டும் அஃதன்றி உழைப்பின்றி மூலையில் முடங்கிக்கிடந்து பிறரின் தயவில் வாழ்க்கையை கழிக்க நினைப்பது கோழைத்தனம், காலாட்சேபத்தைக் கழித்துக்கொள்ள மனிதன்செய்யும் தொழில் எதுவானல் என்ன? தோட்டி வேலைசெய்தாலும் கிடைப்பது ஊதியம் தானே. எனவே உழைத்து உண்பவன் உழைக்காது உண்பவனைவிடமேல். தொழிலில் உள்ள வேறுபாடு மனிதனை உயர்ந்தவனாகவும், தாழ்ந்தவனாகவும் ஆக்கிவிடாது.

பிறரின் தயவை எதிர்பாராது தன்னால் முடிந்த ஏதோ ஒரு தொழிலை நடாத்தி தன்மானத்தைக்காத்து வாழ்பவனே உயர்ந்தவன், ''ஒருவன் ஆகுமான உணவைத்தேடி(உழைத்துக்)கொள்வது (இறைவனுக்கு செய்யவேண்டிய வணக்கம் சம்பந்தமான) கடமைகளுக்குப் பின் உள்ள ஒரு கடமை'' என்று கூறிய நபிகளாரின் ஹதீஸ் உழைத்துண்பதை வலியுறுத்துவதை உழைத்துப் பிழையாதோர் உணரட்டும்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள்:-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-44 | 6-04 | 12-20 | 3-21 | 5-52 |
| | இஷா | ஸஹர்முடிவு | | |
| | 7-12 | 4-29 | | |

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இலங்கை மக்களின் தனிப்பெரும் பிரதிநிதி

இறைவன் படைப்புக்களிலெல்லாம் அரியபடைப்பு மானிடப் படைப்புத்தான். அம்மானிடருள் சேர் பொன். இராமநாதன் போன்ற பெரியார்களின் படைப்பு தனித்திட்டமிட்ட இறைவனின் படைப்புக்களிலொன்று.

தமக்கும், தன் நாட்டிற்கும் தொண்டால் தனிப் புகழ் தேடிவைத்த பெரியார் சேர். பொன். இராமநாதன். அவர்களின் நெஞ்சாழம் கடலாழத்திலும் பெரிதென்றால் மிகையாகாது. இவர் சைவத்திற்கும் தமிழுக்கும் தனிவாழ்வுதரத் தோன்றியவர் அன்னாரிடம் இயல்பாகவே இரத்தத்தில் ஊறிய பண்புகளாய் விளங்கிய நேர்மையும், கடமை உணர்ச்சியும், கடுமைஉள்ளமும், துணிவும், தலைமை தாங்கும் பண்பும், தன்னலமற்ற பணியும், கூரிய அறிவும் தனி வாழ்விற்குரிய பண்புகளாய்மட்டும் தேங்கி விடாமல் பொது வாழ்விற்கும் பொது நலத்திற்கும் உரிய பண்புகளாய் பரிணமித்ததன் விளைவுதான் அன்னாரை இன்று நமக்கு நினைவு கூர வைத்தது.

### சட்டத்துறையில்

1879-ம் ஆண்டு தமிழ் இனத்தைப் பொறுத்த வரையிலோ நம் நாட்டைப் பொறுத்தவரையிலோ ஒரு பொன் ஆண்டாகும். இவ்வாண்டிலேதான் தமது 28 வயதில் இலங்கைசட்ட நிருபணசபையிலே தமிழ் மக்களின் பிரதிநிதியாக நியமனம் பெற்றார், இவர் அங்கு நிகழ்த்திய முதல் உரையே அவர் நாட்டின் சுதந்திரத்தில் கொண்டிருந்த நாட்டத்தை - அஞ்சாமை மிக்க ஆண்மையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டியது.

இதே ஆண்டிலேதான் ஈழத்துச் சட்டத்துறையிலே தன்னிகரற்ற தனிப் பெருந் தலைவனாய் விளங்கிய அவர் அரசியலிலும் காலடிவைத்தார். 1885-ம் ஆண்டு தொடக்கம் 1890-ம்ஆண்டு வரை இலங்கைத் தேசிய சபையைத் தோற்றுவித்து அச்சபைமூலம்சட்டத்துறையில் அவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியது. 1911-ம் ஆண்டிலே சேர். பொன். இராமநாதன் அவர்கள் சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். அந்நாட்களில் இவர் இலங்கையின் விடுதலையை முன்வைத்து சட்டசபையின் ஒவ்வொரு அம்சத்தையும் மிக உன்னிப்பாகக்கவனித்து அதற்கேற்றவாறு உழைத்தார்.

### பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக போர்க்குரல்

1915-ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது இலங்கையர் சார்பில் குறிப்பாகச் சிங்கள மக்களின் சார்பில் பிரித்தானியப் பேரரசிற் கெதிராக போர்க்குரலெழுப்பிய பெருமகன் சேர். பொன். இராமநாதன் தன் உயிரையும் பொருட்படுத்தாது எந்நேரமும் போர்க்கப்பல்கள் இரைந்து சென்று கொண்டிருக்கின்ற பெருங்கடல் மார்க்கமாக இங்கிலாந்து சென்று இலங்கையரின் உயிரைக் காப்பாற்றுவதற்குச் சிந்தை நெகிழ்ந்துருக வாதிட்ட பெருமையை எவர்தான் மறக்கமுடியும். இத்தனைக்கும் மேலாகப் பௌத்த கோயில்களின் சொத்துப் பாது காப்புச்சட்டம் இயற்றிய பணியும் உறங்கிக்கிடந்த சிங்கள இனத்திற்கு இன உணர்வையும் மொழிப் பற்றையும் ஏற்படுத்திய செயலும் சிங்களச் சகோதரர்களின் மீது இவர் கொண்டிருந்த அக்கறையை இனிது எடுத்தியம்புகிறதல்லவா?

— வி.சுதந்திராதேவி —

இவரின் இச்செயல்களுக்கெல்லாம் பக்கத்துணையாய் விளங்கியவர் இவரின் இளவல் சேர். பொன். அருணாசலம் அவர்கள். இவர் செய்த பணியின் பங்கினை ஓர் சிங்களப்பெருமகன் இவ்வாறு சொல்லுகின்றார். ''மகாவம்சத்தில் வரையப்பட்டதுபோல் ஈழம்முழுவதும் இருளடைந்திருந்த போது ஆத்திரஉணர்ச்சியுடன் பொங்கியெழுந்து கொடுமைகளைத் தடுத்து நிறுத்தவும் மீண்டும் வழமையான சூழ்நிலையைஉண்டாக்கவும் தம்மால் இயன்ற அனைத்தும் செய்தபெருமகன் சேர். பொன். அருணாசலம்'' நம்நாட்டின் விடுதலை வேட்கைக்கு வித்திட்ட பெருமக்கள் சேர். பொன். இராமநாதனும், சேர். பொன். அருணாசலமும் தோற்றுவித்த இலங்கைத் தேசிய அவையும்இலங்கைச் சீர்திருத்த அவையும் 1917ம் ஆண்டளவில் கூட்டாகச் சேர்ந்து ஏற்படுத்திய மகாநாட்டில் ஒரே தேசியக் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இலங்கையர் அனைவரும் ஒரே குரலில் சட்ட சீர்திருத்தங்களுக்காக போராடவேண்டு மென்று மகாநாட்டில்நிறைவேறறப் பட்டது. இவைகளெல்லாம் சேர். பொன். இராமநாதனின் நாட்டுப்பற்றை எடுத்துக் காட்டுகின்றனவல்லவா?

சேர். பொன். இராமநாதன் அவர்கள்நம்ஈழத்திற்கு ஆற்றிய உண்மைப்பணி இலங்கையின் முன்னேற்ற வரலாற்றில் ஓர் மறக்கமுடியாத பணியாகும் கடந்த காலத்தில் நிகழ்ந்த முக்கியமான அரசியல் சம்பவங்களை அறிந்து கொள்வதும் அவற்றை ஞாபகப் படுத்திக்கொள்வதும்நாட்டு மக்களின் சந்தோஷ வாழ்விற்கும் சுபிட்சத்திற்கும் இன்றியமையாததாகும். மக்களையும் எங்கள் நாட்டையும் விடுதலை செய்யும் நோக்கத்துடனும் தேசாபிமானத்துடனும் ஆற்றப்பட்ட பொதுச்சேவைகளும் இலங்கையிலுள்ள பல்வேறு பிரிவினரிடையே நிலவிய ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் ஊக்கமூட்டும் அத்தியாயங்களிற் சிலவாகும்.

விவேகமும், நல்லெண்ணமும் கொண்ட ஆண்மை வீரன் சேர். பொன். இராமநாதன் சிந்தனைக் குழப்பங்களுக்கெல்லாம் இடம் கொடாமல் தம் அறிவாற்றலைக் கொண்டு எத்தனையோ இடர்களுக்கிடையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் பேசும் மக்களைக் கொண்ட இலங்கையர் சமுதாயம் முழுவதற்கும் நாட்டின் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வகித்த சகாப்தம் மகத்தானதாகும் ஏனைய தலைவர்களிலும் பார்க்க ஈழத்திருநாட்டின் விடுதலை இயக்கத்தில் ஈடிணையற்ற முறையில் பணியாற்றிய சிறப்பை நம் தமிழினம் தந்த வள்ளல் இராமநாதன் அவர்கள் பெறுவதில் வியப்பொன்றுமில்லை, நம் சுதந்திர நாட்டின் பாராளுமன்ற முன்றலில் முதன் முதலில்விடுதலை வீரன் சேர். பொன். இரமநாதனுக்குச் சிலையமைத்தார்கள் இப்பெருமகனின் புகழ் ஈழம் உள்ளளவும் நிலைத்து நின்று ஒளிருமாறு அவரின் நினைவு தினமாகிய இன்று வாழ்த்துவோமாக.

## கட்டாய ஒய்வு

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

திரு. டி. வி. ஜெயசூரியா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இதில் கட்டாய ஓய்வு பெற்ற நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு தங்களது கட்டாயஒய்வுபற்றிப் பேசுவர் எனத்தெரிகிறது. அகில இலங்கை பூராவும் சுமார் 7000 ஆசிரியர்கள் இத்திட்டத்தின்கீழ் ஒய்வு பெறவிருக்கின்றனர். வட பகுதியில் மட்டும் 800க்கும் அதிகமானோர் ஒய்வுபெறுகின்றனர்.